பகங்கங்கள் 16 விலை ரூபா 12.00

# ஈழநாதம்

வெள்ளிநாதம்

Registered as a News paper

இப்பொழுது ...

ஈழநாதம் - வார வெளியீடு

வெள்ளிநாதம்

யாழ்ப்பாணத்தில்

விற்பனையாகின்றது.

விற்பனை முகவர்: -
பூபாலசிங்கம் புத்தகசாலை,
மருத்துவமனை வீதி- யாழ்.

நாதம் 13 | திருவள்ளுவர் ஆண்டு 2033 | பங்குனி 29 | 12-04-2002 | வெள்ளிக்கிழமை | ஓசை 53

# புலிகளின் தலைவர் வெளியிட்ட கருத்துக்கள் அமைதி நடவடிக்கைகளுக்குப் பலம்சேர்க்கும்

## சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

''விடுதலைப் புலிகளின் தலைவர் வெளியிட்டுள்ள கருத்துக்கள் அமைதி நடவடிக்கைகளுக்கு மேலும் பலம் சேர்க்கும் வகையில் அமைந்துள்ளது'' என சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் நேற்று முன்தினம் உள்ளூர், சர்வதேச செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்த கருத்துக்கள் குறித்தே சிறிலங்காப் பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை நடைபெற்றசெய்தியாளர் மாநாட்டில் இவ்விடயம் குறித்து தனது கருத்துக்களைத் தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறுகயில்;

'விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பொறுத்தவரை அதன் தலைவர் பிரபாகரன் தெரிவித்திருப்பது ஒரு சாதகமான சமிக்ஞை. இருபது வருட இரத்தக் களரியை முடிவுக்குக் கொண்டுவந்து நாட்டில் அமைதிச் சூழ் நிலையைத் தோற்றுவிக்கக் கூடிய நிலைமை தென்படுகிறது' என அவர் தெரிவித்தார். (16ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியா உதவ வேண்டும்

(சென்னை)

இலங்கையில் நடைபெறும் சமாதான முயற்சிகளுக்கு இந்தியா உதவவேண்டும் என மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலர் வை. கோ. மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில்:

இலங்கையின் இனப்பிரச்சினையை மனிதாபிமான (16ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி வருகை

(புதுக்குடியிருப்பு)

யாழ். குடா நாட்டுக்கான தரை வழிப் பாதை திறந்து வைக்கப்பட்டுள்ளதை அடுத்து யாழ். குடா நாட்டிலிருந்து பெருமளவான மக்கள் வன்னிக்கு தினமும் வந்த வண்ணம் உள்ளனர்.

பிரிந்து வாழும் தம் உறவுகளைப் பார்ப்பதற்கு ஒரு பகுதியினரும் மற்றும் வன்னிப் பகுதியை பார்ப்பதற்கு இன்னொரு பகுதியினருமாக தினமும் பெருமளவானவர்கள் வருகின்றனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## தேசியத் தலைவரின் மாநாட்டிற்கு செய்தி ஊடகங்கள் முக்கியத்துவம்

(லண்டன்)

தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் நடத்திய ஊடகவியலாளர் மாநாடு குறித்த செய்திகளுக்கு வெளிநாட்டு, உள்நாட்டு ஊடகங்கள் முக்கியத்துவம் வழங்கின.

வெளிநாட்டு, உள்நாட்டு பத்திரிகைகள், வானொலிகள், தொலைக்காட்சிகள், இணையத்தளங்கள் போட்டி போட்டுக்கொண்டு இந்த ஊடகவியலாளர் மாநாடு குறித்து பல்வேறு கோணங்களில் செய்திகளை வெளியிட்டுள்ளன. அத்தோடு இந்த மாநாடு குறித்த புகைப்படங்களையும் வெளியிட்டுள்ளன. ரூபவாகினி, சண் செய்திகள் போன்ற தொலைக்காட்சி ஊடகங்கள் மாநாடு முடிவுற்றதும் உடனடியாகவே இம்மாநாட்டு செய்திகளை முழுமையாக ஒளிபரப்பின.

இதேவேளை சர்வதேச ஊடகங்கள் விடுதலைப் புலி (16ஆம் பக்கம் பார்க்க)

## நேர்நோக்கு

1995இல் யாழ். நகரை சிறிலங்கா இராணுவம் ஆக்கிரமித்தவேளை- யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றியதன் மூலம் தமிழ்மக்களின் மனம் புண்பட்டுப் போய்விட்டது என்று கூறப்படுவதை தன்னால் புரிந்து கொள்ள முடியவில்லை யென்றும், இந்தமன உணர்வு எப்படி அவர்களுக்கு வந்தது? என்பது தனக்குத் தெரியவில்லை என்றும் சனாதிபதி சந்திரிகா அமெரிக்க சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் தாங்கள் ''தமிழ் மக்களின் இதயங்களையும் மனங்களையும் வெல்லப் போவதாக''வும் அன்றைய அரசாங்கத் தரப்பினர் கூறிவந்தனர்.

எனினும் இறுதி வரையில் அவர்களால் அதனைச்சாதிக்க முடியவில்லை என்பதை வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் திருகோணமலை என அரசியல் பணிகளை மேற்கொள்ளச் செல்லும் போராளிகளுக்கு தமிழ் மக்கள் வழங்கும் உணர்வுபூர்வமான வரவேற்பு காட்டுகிறது. அதுமட்டுமல்ல தமிழ் மக்களின் இதயங்களிலும் மனங்களிலும் என்றும் புலிகளே நிறைந்திருக்கின்றனர் என்பதும் வெளிப்பட்டு வருகிறது.

சந்திரிகா அரசின் இத்தோல்விக்குக் காரணமென்ன?

மக்களின் மன உணர்வுகளைப்புரிந்து கொள்ளவோ அதற்கேற்ப செயற்படவோ முயலாமையே இதற்குக் காரணமாகும் அதாவது தமிழ்மக்களின் மனவுணர்வுகளைப் புரிந்துகொள்ள முடியாத சந்திரிகா அம்மையாரால அவர்களின் மனங்களையும் இதயங்களையும் வெற்றி கொள்ளமுடியவில்லை.

ஆனால், தமிழர்களின் மனவுணர்வுகளை புரிந்து கொண்டவர்கள் என்று சொல்வதைவிட, தமிழ்மக்களின் மனவுணர்வையொத்த என் அவர்களின் மனவுணர்வின் குறியீடாக உள்ள புலிகளால் இலகுவாக மக்களின் இதயங்களையும் மனங்களையும் வெற்றி கொள்ளமுடிந்திருக்கிறது.

இந்த யதார்த்தத்தைப் புரிந்துகொள்வதன் மூலமே இலங்கையில் நிலவும் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும்.

## - சிறப்புற நடைபெற்ற - சாள்ஸ் அன்ரனிபடைப்பிரிவு 11-ம் ஆண்டு நிறைவு விழா

(நமது நிருபர்)

சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் பதினோராம் ஆண்டு நிறைவு விழா நேற்று முன்தினம் வன்னியில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டுள்ளது. இதில் பகல் நிகழ்வாக விளையாட்டுப் போட்டிகளும் மாலை நூல் நிலையத்திறப்பு நிகழ்வும் அரங்க நிகழ்வுகளும் இடம்பெற்றன.

மதியம் 2. 30 மணிக்கு ஆரம்பமாகிய விளையாட்டுப் போட்டி நிகழ்வில் பிரதான ஈகச்சுடரினை புலனாய்வுத் துறையின் நிர்வாகப் பொறுப்பாளர் சங்கர் ஏற்றி வைத்தார்; தேசியக் கொடியினை கட்டளைத் தளபதி கேணல் (16ஆம் பக்கம் பார்க்க)

## தொழிற்பயிற்சி நிறுவனம் கிளிநொச்சியில் திறப்பு

பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தின் அனுசரணையுடன் தொழில் பயிற்சி நிறுவனம் ஒன்று நேற்றுகிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்டது.

விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம்அவர்கள் இந்நிறுவனத்தின் பெயர்ப்பலகையைத் திரை நீக்கம் செய்து வைக்க, பயிற்சி நிறுவனத்தினை நாடாவை வெட்டி திருமதி அடேல்பாலசிங்கம் அவர்கள் திறந்து வைத்தார்.

பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தலைவி செல்வி. அருளானந்தம்தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரை செஞ்சோலைப்பொறுப்பாளா செல்வி ஜனனி ஏற்றி வைத்தார். தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ அரசியல் (16ஆம் பக்கம் பார்க்க)

## அன்ரன் பாலசிங்கத்துக்கு சிகிச்சை; இந்திய அரசு பரிசீலிக்கத் தயார்!

### — இந்தியப் பிரதமர் வாஜ்பாய்

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்களை இந்தியாவில் மருத்துவ சிகிச்சை பெற அனுமதிக்குமாறு விடுக்கப்பட்டுள்ள கோரிக்கையை மனிதாபிமான ரீதியில் பரிசிலனை செய்யத்தயார் என இந்தியப் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் நேற்று முன்தினம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டின் பின்னர். இந்தியப் பிரதமரை செய்தியாளர் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் பற்றிய இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றம் எதுவும் இல்லை ஆனால் விடுதலைப் புலிகளும் சிறிலங்கா அரசும் ஈடுபட்டிருக்கும் சமாதான நடவடிக்கைகளை தாம் ஆதரிப்பதாகவும் இந்தியப் பிரதமர் வாஜ்பாய் மேலும் தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு இந்தியா வழியாக தாய்லாந்து செல்வதற்கான கோரிக்கை எதுவும் இதுவரை முன்வைக்கப்படவில்லை என்றும் வாஜ்பாய் தெரிவித்தார்.

## சிகிச்சையின்றி அனுப்பப்பட்டார்

(வவுனியா)

வவுனியா வைத்தியசாலையில் இருந்து கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு சத்திர சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்ட யுவதி ஒருவர் சிகிச்சை எதுவும் மேற்கொள்ளப்படாமலேயே திருப்பி அனுப்பப்பட்டதாக முறைப்பாடு செய்துள்ளார்.

வவுனியா மனித உரிமை ஆணைக்குழுவிலேயே அவர் இந்த முறைப்பாட்டினைச் செய்துள்ளார்.

விசுவமடுவைச் சேர்ந்த ஜானகி (வயது-25) என்பவர் (16 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழ சுகாதார சேவையின் செயற்பாட்டில் வன்னியில் வைத்தியசேவை மேப்பட்டிருந்தது!

## வடக்கு, கிழக்கு மாகாண சுகாதார சேவை பணிப்பாளர்

(புதுக்குடியிருப்பு)

தமிழீழசுகாதாரசேவையினரின் ஒத்துழைப்பாலும் அவர்களின் திட்டங்களாலும், முயற்சிகளாலும் வன்னியில் வைத்திய சேவைஓரளவேனும் திருப்திகரமாக இருந்துள்ளதை இங்குவந்து பார்க்கின்ற போது உணர முடிகின்றது.

இவ்வாறு, வன்னிக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு புதுக்குடியிருப்பு வந்து சேர்ந்துள்ள வடக்கு- கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் செ:குமாரவேற்பிள்ளை தெரிவித்தார்.

இவருடன் மாகாண அமைச்சின் அதிகாரிகளும், கிளி - முல்லை பிரதி மாகாணசபை சுகாதார சேவைகள் பணிப்பாளர் எஸ்: சிவமோகனும் உலக சுகாதார ஸ்தாபனத்தைச்சேர்ந்த திருமதி மாணிக்கராசாவும் வந்தனர்;

''இங்குள்ளகுறைபாடுகளை பார்வையிட்டு அதன் அறிக்கையை மாகாண அமைச்சுக்கும். சுகாதார அமைச்சுக்கும் வழங்குவதே எமது பயணத்தின் முக்கிய நோக்கமாகவுள்ளது.

முன்பு இங்கு வருவதற்கு அனுமதி எமக்குக்கிடைக்கவில்லை. இதனால் இங்குவர முடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலை எமக்கு இருந்தது'' என கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போது அவர் தெரிவித்தார்:

சிற்றூழியர்களை நியமனம் செய்வதற்கு அரசு அனுமதி தந்தால் நாம் நியமனம் வழங்குவோம். தொண்டர் சேவை மூலம் வன்னியில் பெருமளவானோர் வேலை செய்கின்றனர். அவர்களுக்கு நியமனம் வழங்குவதற்கு எமக்கு அதிகாரம்இல்லைஎன தொண்டர் சேவையில் உள்ளவர்களுக்கு நியமனம் வழங்கப்படுமா எனக்கேட்டபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் வன்னிப் பகுதிக்கு நியமனங்கள் செய்வது மிகவும் கடினமான காரியமாக இருந்தது. அரசியல் நெருக்கடிகளே இதற்குக் காரணமாக அமைந்ததோடு அதிகாரங்கள் பன்முகப்படுத்தப்படாமையும் இதற்கு காரணமாகும் என அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தக் குழுவினர் முல்லைத்தீவு நகருக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளையும்பார்வையிட்டு திரும்பினர். (08)

## ஒன்றுகூடல் நிகழ்வு

(முழங்காவில்)

பூநகரி மகாவித்தியாலய க. பொ. த. உயர்தர மாணவர்களின் பிரிவு மதியபோசன ஒன்றுகூடல் நிகழ்வு பூநகரி ம.வி. மண்டபத்தில் கடந்த செவ்வாயன்றுநடைபெற்றது.

பூநகரி தமிழ் மாணவர் ஒன்றியத்தலைவர் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக பூநகரி கல்விக்கோட்டகல்விப்பணிப்பாளர் இ. மு. சண்முகராசா கலந்து சிறப்பித்தார்:

பூநகரி மாணவர் அமைப்பு பொறுப்பாளர் ஈழப்பிரியன் தேசியக்கொடியைஏற்றிவைத்தார்.

சிறப்புரையினை பூநகரி கல்விக்கழகப்பொறுப்பாளர் ஆர்வலன் ஆற்றினார். (02)

# ஊடகத்துறை சுதந்திரமாகசெயல்பட சட்டங்களை திருத்த நடவடிக்கை

### — மக்கள் தொடர்பாடல் அமைச்சர்

தொடர்பு சாதனச்சுதந்திரத்துக்கு இடையூறாக உள்ள சட்டங்கள் திருத்தப்படும் மானநஷ்டம் தொடர்பான சட்டங்கள் திருத்துவதற்கான யோசனைகளும் அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக சமர்பிக்கப்பட்டிருக்கிறது என மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர்மாக்கார் தெரிவித்துள்ளார்.

இது மக்கள் தொடர்பாடல் அமைச்சின் நிதி ஒதுக்கீடு தொடர்பாக பாராளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் அமைச்சர் இம்தியாஸ் இது தொடர்பாக உரையாற்றினார்.

தற்போதைய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் தகவல் தொடர்பு சாதனங்கள் மக்களுடன் நெருக்கமான முறையில் செயல்பட்டு வருகிறன.

தற்போது நடைமுறையில் இருக்கும் பத்திரிகைத்துறைக்கு பதிலாக சுயாதீனமான தகவல் ஆணைக்குழு நியமிக்கப்படும் எனவும் கூறினார்:

# முருகானந்தா வித்தியாலய கணனிப் பயிற்சிநெறி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி முருகானந்தா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் கணனிப்பயிற்சி முதன் முறையாக ஆரம்பித்து வைக்கப்பெற்றது.

மேற்படி பாடசாலை அதிபர் குலராசசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளி. வலயபிரதி கல்விப்பணிப்பாளர் (திட்டமிடல்) க.ம. பத்மநாதனும், சிறப்பு விருந்தினராக கண்டாவளை கோட்டக்கல்விப்பணிப்பாளர் சி. சிற்றம்பலமும் கலந்துகொண்டனர்;

தமிழீழத்தேசியக்கொடியினைபிரதேச அரசியல்துறை பொறுப்பாளர் ஆதித்தவர்மன் ஏற்றிவைத்தார். மங்கல விளக்கினை ஊரியான் கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவர் வே: பரமலிங்கம், இரணைமடுதிட்ட (முரசுமோட்டை) உபசெயலாளர் சி. சிதம்பரநாதன். ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

அடுத்து இக்கல்லூரியின் விஞ்ஞான ஆசிரியராக இருந்த க. மகேந்திரனின் உருவப்படத்துக்கு அவரதுதாயார் திருமதி கந்தசாமி, துணைவியார் கமலாதேவி ஆகியோர் மலர்மாலை அணிவித்தனர்:

தொடர்ந்து ஆதித்தவர்மன், க. ம. பத்மநாதன், சி. சிற்றம்பலம், ஆசிரியர் உதயன் பாடசாலை அபிவிருத்திச்சங்க நிர்வாக உறுப்பினர் சி. அருளானந்தம் ஆகியோரும்மாணவன் சி.பிரசாத்தும். உரையாற்றினர் நன்றியுரையை ஆசிரியைதிருமதி சி. சத்தியமூர்த்தி ஆற்றினார்; (சோ)

## சிறப்பு ஒன்றுகூடல்

(முழங்காவில்)

பூநகரி, முழங்காவில் பிரதேச,வலய ஊரகபோரெழுச்சிக்குழு ஆகியவற்றின் அனைத்து உறுப்பினர்களுக்குமான சிறப்பு ஒன்று கூடல் எதிர்வரும் பதினாறாம் திகதி காலை10 மணிக்கு ஜெயபுரம் அ. த. க. பாடசாலையில் நடைபெறும் என பிரதேச போர் எழுச்சிக்குழுத்தலைவர் ப. கனகலிங்கம் தெரிவித்தார். (02)

## கோட்டமட்ட போட்டிகள்

கரைதுறைப்பற்று கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான கோட்ட மட்ட விளையாட்டுப்போட்டி முள்ளியவளை வித்தியானந்த கல்லூரி விளையாட்டுத்திடலில் கடந்த செவ்வாய் புதன் ஆகிய தினங்களில் கரைதுறைப்பற்றுக்கோட்டக்கல்வி அதிகாரி ஜீ. எஸ், பரமேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

விறுவிறுப்பாக போட்டிகள் நடைபெற்று இறுதியில் 195 புள்ளிகளை பெற்று முள்ளியவளை வித்தியானந்த கல்லூரி முதலாம் இடத்தையும் குமுழமுனை மாகாவித்தியலயம் இரண்டாம் இடத்தையும்,வற்றாப்பளை மகாவித்தியாலயம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன. (ஆ)


## விளையாட்டுப்போட்டி பற்றிய அறிவித்தல்

மங்களேஸ்வரா விளையாட்டுக்கழகத்தினால்வருடப்பிறப்பன்று நடாத்தப்படும் மாபெரும் விளையாட்டுப் போட்டி. காலை 6.00 மணிக்கு மரதன் ஓட்டமும் அதனைத் தொடர்ந்து பி.ப. இரண்டு மணிக்கு மாட்டு வண்டிச்சவாரிப்போட்டியும் நடைபெறும் என்பதனை அனைத்து ரசிகர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

நிர்வாகம் மங்களேஸ்வரா,
விளையாட்டுக்கழகம்,
வற்றாப்பளை.

(6687)

வவுனிக்குளம் - சிவபுரம்

## சிவாலய வசந்தமண்டப கும்பாபிஷேகம் - 2002

சிவனடியார்களே!

சிதளாம்பிகை சமேத சிவபுரநாதராக எழுந்தருளியிருந்து அடியார்களுக்கெல்லாம் அருள்பாலித்துக் கொண்டிருக்கும் எம்பெருமானுக்கு சித்திரபானு வருடம் 1ஆம் திகதி (14-04-2002) ஞாயிற்றுக்கிழமை காலை 9 05-10.35 வரையுள்ள சுபவேளையில் வசந்தமண்டப கும்பாபிஷேகம் நடைபெறும். இத்தருணம் சிவனடியார்கள் வருகைதந்து இந்நிகழ்வில் கலந்துகொண்டு எம்பெருமானின் அனுக்கிரகத்தைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

ஆலய பரிபாலன சபையினர்
சிவபுரம்-வவுனிக்குளம்

(1757)

## பணிநிலை வேண்டுகை

பணியின் வகை:- அலுவலக எழுதுநர்
வயதெல்லை :- 40- 50
சம்பளம் :- நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்,
கல்வித்தகைமை:- க. பொ. த (சா. தரம்)

குறிப்பு;- 10 வருடத்துக்கு மேற்பட்ட மேற்படிபணி அனுபவம் உள்ளவர்கள் அல்லது ஓய்வு பெற்ற அரச அலுவலக ஊழியர்கள் விரும்பத்தக்கது.

புதுக்குடியிருப்பு/ கிளிநொச்சியில் பணியாற்றக் கூடியவராக இருத்தல்.

மேற்படி தகைமையுடையவர்கள் தமது சுயவிபரங்கள் அடங்கிய மாதிரி விண்ணப்பங்களை 20.04 2002 திகதிக்கு முன்பாக ''தமிழீழ சுகாதார சேவைகள், நடுவப்பணியகம் புதுக்குடியிருப்பு'' என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

பொறுப்பாளர்,
தமிழீழ சுகாதார சேவைகள்.

(சி· 6686)

## சாவு அறிவித்தல்

திருவாளர்

### மரியாம்பிள்ளை பிறான்சீஸ்

(ஓய்வுபெற்ற அதிபர் சில்லாலை றோ. க. த. க பாடசாலை)

யாழ். சில்லாலையை பிறப்பிடமாகவும் வவுனியாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சின்னராசா மாஸ்ரர் என அழைக்கப்படும். திரு. மரியாம்பிள்ளை பிறான்சீஸ் அவர்கள் 05-04-2002 அன்று இயற்கை எய்தினார்.

இவர் மேரிகிளாறா (மல்லிப்பூ)வின் அன்புக் கணவரும் அருமைநாயகம், செல்வநாயகம், சுகிர்தம் ஜீவரட்ணம், புனிதம் ஜெயராஜா, மரியநாயகம், தரளம் அன்ரன், இராசநாயகம், ஜீவநாயகம் ஆகியோரின் அன்புத்தந்தையும் கிதா, சுவேந்தினி, ஜீவரட்ணம், ஜெயராஜா, வசந்தமாலா, அன்ரன், கிறிஸ்ரீன், றேணுகா, ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 07-04-2002 அன்று வவுனியாவில் நடைபெற்றது.

தகவல்:
மகன் ஜீவநாயகம்.

இல: 323, 2ஆம் வாய்க்கால்;
கந்தபுரம்,
(கணக்காய்வுப்பகுதி, நிதிப்பிரிவு, அரசியல்துறை)

(1705)

# வெள்ளிநாதம்

12.04.2002 வெள்ளிக்கிழமை


"சிறந்நுகொண்ட பூகம் பத்தின குமுறலாகஎழும் எமது இனத்தின் எழுச் சிக்குரலை சிங்கள தேச மும், சர்வதேச சமூகமும் அசட்டை செய்ய முடி யாது"








## தனித்துவ வரிகள்

கலைத் தவிர வேறெந்த ஆயுதம் சிங்கத்திடம் உண்டு

- ஜான் கீட்ஸ்

எவன் தன்னந்தனியாகத் தனித்து நிற்கிறானோ, அவனே உலகில் வலிமை மிகுந்தவன்.

- ஹென்றிக் இப்ஸென்.

எவர் என்ன சொன்னாலும் பொருட்படுத்தாது, உன் இலட்சியத்தைப் பின்பற்றிச்செல்.

- ஹென்றிக் இப்ஸென்.

முன்னேற்றத்தில் அதன் தனித்தன்மை அகற்றப்படும்போது முன்னேற்றமும் நின்றுவிடும்.

- ஜான் ஸ்டுவர்ட் மில்.

ஈழநாதம்

வெள்ளிநாதம்

# மற்றும் ஒரு வரலாற்று நிகழ்வு

மீண்டும் ஒரு வரலாற்று நிகழ்வை வன்னி மண் கண்டுள்ளது.

உலகம் வன்னிக்குள் ஒடுங்கிக் கிடந்தது. வன்னியை நோக்கி உலகம் தன் பார்வையைக் குவியப்படுத்தி கவனத்தை ஒருங்குவித்து நின்ற அந்த இருநாட்களும் தமிழ் மக்களின் வரலாற்றில் முக்கியத்துவம் மிக்கவை.

சர்வதேச பத்திரிகையாளர்கள் ஊடகவியலாளர்களை ஏற்றியபடி போரின் வடுக்களைச் சுமந்து குண்டும்குழியுமாகக் கிடக்கும் நீண்ட யாழ் வீதி வழியாக அறிவியல் கண்டுபிடிப்பின் வியத்தகு அதிநவீன தொடர்பூடக சாதனங்களையும் அவற்றை இயக்கும் தொழில் நுட்பவியலாளர்களையும் சுமந்தபடி புழுதி பறக்கும் அனல்காற்றை கிழித்தபடி வன்னிநோக்கி வந்த காட்சி இதுவரை காணாத ஒன்று.

தேடல் நிறைந்த விழிகளும், அறிதலுக்கான ஆர்வம் கொப்பளிக்கும் மனங்களும் கொண்ட சர்வதேசக்கருத்துருவாக்கிகளின் சங்கமம்வன்னி மண்ணைச் சிலிர்க்க வைத்தது.

தமிழீழ தேசிய தலைவரை சந்திக்க, அவரை நேர்காணல் செய்ய, அவருடைய கருத்துக்களூடாக தமது சந்தேகங்களை தெளிந்துகொள்ள பரஸ்பரம் எண்ணங்களைப் பரிமாறிக் கொள்ள வந்த உலக ஊடகப் பறவைகள் ஒன்று கூடமகிழ்ந்த காட்சி மாறிவரும் காலத்திற்கு ஒரு மறக்க முடியாத காட்சி.

அவருடன் கழித்த அந்த இரண்டரை மணி நேர பொழுதுக்காக அவர்கள் கடந்த இருவாரங்களாகவே தம்மைத்தயார் படுத்திக்கொண்டு எதிர்பார்ப்புக்களைச் சுமந்தபடி, ஆவல்ததும்ப காத்திருந்த கதைகளை அவர்களின் புலர் கூறிய போது அவர்கள் அமைவந் மறைமுகமாக ஆனால் உறுதியாக ஒரு பிரகடனத்தை சர்வதேச சமூகத்திற்கு மௌனமாகவே உணர்த்தி விட்டுள்ளனர் என்றே கூறவேண்டும்.

தாங்கள் சந்தித்து, கருத்துப்பரிமாறி, அதன் மூலமான தகவல்களை உலகெங்கும் தெரிவிக்கவந்துள்ள வன்னிமண் இதுவரை சிறிலங்கா அரசும், அதன் விஷமத்தனமான பொய்ப்பிரச்சாரங்களை நம்பி அதன் சார்புநிலைக் கருத்துக்களை, எந்தவிதமான பகுப்பாய்வு ரீதியிலான அணுகுமுறைக்கும் உட்படுத்தாது, ஏற்றுக்கொண்டோரும் கூறியது போன்று ஒரு பயங்கரவாத மண்ணல்ல அங்குள்ள மக்கள் பயங்கரவாதிகளுமல்ல, அவர்களின் பெருமதிப்பிற்குரிய வழிகாட்டியான தலைவர் ஒரு பயங்கரவாதியுமல்ல என்பதே அதுவாகும்.

இதன்மூலம் சர்வதேச ரீதியான - பலகோடி மில்லியன் ரூபாய் செலவிலான சிறிலங்கா அரசின் யுத்தவெறி கொண்ட பேரினவாத சக்திகளினதும், லக்ஷ்மன் கதிர்காமர் போன்ற இன விரோதிகளினதும் பிரச்சாரப் புலம்பல்கள் யாவும் அர்த்தமற்றவையாக்கப்பட்டுள்ளது.

எனவே இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் மிக்க நிகழ்வு என்பதும் பதியப்படவேண்டிய விடயமாகிவிட்டது.

அண்மைக்கால தொடர் நிகழ்வுகள் ஒவ்வொன்றும் விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் என்றும் அவர்களின் போராட்டத்தை பயங்கரவாதச் செயல் என்றும் கூறி அவர்களைத் தடைசெய்துள்ள நாடுகளின் தீர்மானத்தை மீள் பரிசீலனை செய்யவேண்டிய நிலைக்கும் தள்ளியுள்ளது.

இதுவே இந்த நிகழ்வின் முக்கியமான எதிரொலியாகவும் இருக்கப்போகிறது.

அரசாங்கங்கள் எத்தகைய பொய்யான கருத்துக்களைப் பரப்பி பிரச்சாரம்செய்ய முயன்றாலும், அதற்கென தமது வளங்கள் அனைத்தையும் பயன்படுத்தினாலும் கூட, சர்வதேச வெகுசனத் தொடர்பூடகவியலாளர்கள் உண்மையைச்சார்ந்தும், சத்தியத்தைச் சார்ந்தும் மனோதர்மத்துடன் செயற்படுபவர்களாக இருப்பார்களேயானால், நியாயம் தோல்வியடைவதற்கான வாய்ப்புக்களை முறியடித்து விடமுடியும்.

மக்கள் ஊடகங்களை, ஊடகவியலாளர்களை நம்புகின்றனர் என்ற உண்மையை ஊடகவியலாளர்கள் புரிந்துகொள்வதும் மிக அவசியம். இந்த மக்களது நம்பிக்கையானது அவர்களைப்பலவீனம் என நினைத்து செயற்படுமளையும் ஊடகவியலாளர்களை மக்களே இனங்கண்டு தூக்கியெறிந்து விடுவார்கள் என்பதற்கான வரலாற்றுச் சான்றுகள் ஏராளமாகவே உள்ளது.

எனவே கருத்துருவாக்கிகளின் கடமை சமூகம் சார்ந்தது, மனித நேயம் சார்ந்தது, உண்மை சார்ந்தது. அது மட்டுமன்றி மனோ தர்மத்தைச் சார்ந்ததுமாகும்.

அரசியல்வாதிகளின் அபிலாஷைகளை நிறைவேற்ற உண்மையை திரிபுபடுத்தும் ஊடகவியலாளன் ஒரு கருத்து வியாபாரியே ஆவான். இத்தகையோரின் செயற்பாடுகள் மக்களை கருத்து ரீதியில் குழப்பமடைந்தவர்களாகவே மாற்றிவிடும். ஆனாலும் காலம் இவர்களை என்றோ ஒருநாள் இனம்காட்டவே செய்யும்.

கடந்த சந்திரிகா அரசில்இந்தப்போலிக் கருத்துருவாக்கிகளைப் பயன்படுத்தி பலகோடி மில்லியன் செலவில் பல ஆண்டு காலமாக, லக்ஷ்மன் கதிர்காமரைக் கொண்டு தமிழ் மக்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எதிராக மேற்கொண்ட பிரச்சார யுத்தம் இந்த 'இரு நாள் நிகழ்வில்' படுதோல்வியைக் கண்டுவிட்டதென்றே கூற வேண்டும்.

கதிர்காமர் பறந்து பறந்து செய்த பயங்கரவாதப் பிரச்சாரம், வன்னி மண் தேடி பறந்து வந்த பத்திரிகையாளர்களினால் படுபரிதாபமாக சிதைந்துபோய் விட்டது.



'தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும்.. தர்மம் மறுபடியும் வெல்லும்' பகவத்கீதையின் வரிகளே இந்த சமயத்தில் நினைவுக்கு வருகின்றன...

வெகுசன தொடர்பூடகவியலாளர்களே உங்களுக்கு எம் நன்றிகள். உண்மையைக் கூறுங்கள்... உண்மையாய்க் கூறுங்கள்...

## ஒரு கற்பனைச் சந்திப்பு

# 'தேனீ'யின் கதிர்காம(ர்) தரிசனம்

சசிகரன்

வீட்டு விறாந்தையில் குறுக்கும் நெடுக்குமாக கையை அசைத்து அசைத்து ஏதோ உளறியபடி முன்னாள் அமைச்சர் கதிர்காமர் நடந்து கொண்டிருந்தமை அவ்வழியால் பறந்துகொண்டிருந்த தேனீயின் கடைக் கண்பார்வைக்குள் வீழ்ந்துவிட்டது.

விர்ரென்று திரும்பி முற்றத்தில் நின்ற மரத்தில் இருந்து இவரது நடவடிக்கையை அவதானித்த தேனீக்கு இவர் குழம்பிப்போய் இருப்பது தெரிந்தது.

இதுதான் நல்லதருணம் இப்ப போனால்தான் சில விஷயங்களை கறக்கலாம் என்பதை உணர்ந்து கொண்டதாக சட்டென்று பறந்து விறாந்தையில் இருந்த பூச்சாடியின் மேல் அமர்ந்தபடி ''என்ன உங்களுக்குள்ளேயே புறுபுறுத்தபடி திரிகிறீங்கள். உங்களைப்பார்த்தா ஏதோ குழப்பத்தில் இருப்பவர்போலத்தெரியுது'' என்று பேச்சைத்தொடங்கியது.

என்னத்தை சொல்லுறது நான் கஸ்ரப்பட்டு சர்வதேசம் முழுக்க அலை அலை என்று அலைஞ்சு அவங்கடகாலிலை விளாக்குறையா கெஞ்சி புலிகளை 'பயங்கரவாதிகள்' எண்டு நம்பவைச்சுவிட, இப்ப இவங்கள் சும்மா இருந்துகொண்டு எங்கட திட்டங்களை எல்லாம் தவிடுபொடியாக்கிவிட்டாங்கள் அதுதான் நினைக்க நினைக்க கோபம் கோபமாவருகுது.

ஓ, கோ, கோ நீங்கள் அங்கை நிக்கிறியளோ சரி, சரி, சரி .. அப்பிடி என்னெண்டுதான் இந்த உலக நாடுகளை நம்பவைச்சியள்?

அதையேன் கேக்கிறாய். நான் சந்திரிகா அம்மாவாலை வெளிவிவகார அமைச்சராய் நியமிக்கப்பட்டவுடன ஒவ்வொரு நாடாய் போய் புலிகள் ஒரு விடுதலை அமைப்பு அல்ல. அவர்கள் தங்கட மக்களுக்காக போராடுவதாக வெளியில் காட்டிக்கொண்டு, ஆட்சியாளர்களையும் பொதுமக்களையும் படுகொலை செய்யினம்; கடத்துகினம் என்டெல்லாம் பொய் சொல்லி ஒண்டுக்குப்பத்துத்தடவை போய் கெஞ்சு, கெஞ்சி எண்டு கெஞ்சு ஒரு மாதிரி அமெரிக்காவை நம்பவைச்சு பயங்கரவாதபட்டியலிலை சேர்த்துப்போட்டன்.

ஓ .. நீங்கள் கில்லாடிதான். இல்லாட்டி சந்திரிகா அம்மா உவ்வளவு பேர் இருக்க உங்களுக்கு உந்தப்பதவியைத் தாறாவே நீங்களும் நம்பிக்கைத்துரோகம் செய்யாமல் உங்கடை பணியை நல்லாய்த்தான் செய்திருக்கிறியள் என்றது தேனீ.

நமட்டுச்சிரிப்பு சிரித்த அவர்; அப்பிடி அமெரிக்காவை நம்பவைச்சதாலதான் பிறகு மற்ற நாடுகளையும் அப்பிடிச்செய்யவைக்க முடிஞ்சுது இருக்கிற நல்ல பெயரைக்கெடுக்க வேணும் எண்டு திட்டம் போட்டன் அதன்படிதான் முதலில இந்தக்கடையளை போடுவிச்சன். அமெரிக்காவைத்தொடர்ந்து பிரிட்டன், அவுஸ்திரேலியா, கனடா போன்றவையையும் தடைசெய்யவைச்சன்.



இப்பிடி ஏனைய நாடுகளிலையும் புலிகளைத் தடைசெய்விச்சுவிட்டு அடுத்தகட்டமாய் புலிகளுக்கு திரட்டிற காசுகளையும் நிற்பாட்டுவிச்சுவிட்டா அவையின்ற ஆட்டம் நளோஸ். பிறகு நாங்கள் சிம்பிளாய் அவையளை இஞ்சை அழிச்சுப்போடலாம் எண்டிருக்க காரியம் கைகூடி வாறநேரம் பார்த்து ரணில்வந்து எல்லாத்தையும் கெடுத்துப்போட்டன்.

நீங்கள் இப்பிடிச்சொல்லுறியள் புலிகளை தடை செய்தாப்பிறகும் புலிகள் எள்ளளவும் பிசகாமல் இன்னும் டாரியள்வில் சண்டை செய்து உங்கடை படையளை அடிச்சுத்துரத்திவிட்டாங்கள். எந்தக்காலத்திலையும் விழாது எண்டு அமெரிக்க அதிகாரியால உறுதியளிக்கப்பட்ட அதியுயர் பாதுகாப்புக்களை இயற்கையாகக் கொண்டிருந்த இந்த ஆனையிறவையேதுடைச்சு அழிச்சிட்டாங்களே' என தேனீ சொன்னபோது தலையை சற்று தொங்கப்போட்ட அவர் உண்மைதான். நான் வெளிவிவகார அமைச்சர் எண்டவகையிலை என்னால செய்யக்கூடியதை செய்தேன். அவங்கள் இஞ்சை கோட்டைவிட்டதுக்கு நான் ஒண்டும் செய்யஏலாது தானே. அதோடதானே என்ர சர்வதேச பிரச்சாரம் எல்லாம் பிழைச்சுப்போச்சு, புலிகள் உண்மையிலேயே

> என்ர சர்வதேச பிரச்சாரம் எல்லாம் பிழைச்சுப்போச்சு புலிகள் உண்மையிலேயே ஓர் இன விடுதலைக்கான அமைப்புத்தான் எண்டதை எல்லா நாடுகளும் நம்பத்தொடங்கி விட்டுது. அதையும் ஒருமாதிரி சமாளிச்சு விடலாம். எண்டால்...
> ''கதிர்காமர்''

ஓர் இன விடுதலைக்கான அமைப்புத் தான் எண்டதை எல்லா நாடுகளும் நம்பத்தொடங்கிவிட்டுது. அதையும் ஒருமாதிரி சமாளிச்சுவிடலாம் எண்டால் .. என இழுத்தார் கதிர்காமர்.

உண்மையை எத்தினை நாளைக்குத்தான் மறைக்க முடியும். என்னடைக்கோ ஒருநாள் அது வெளியில வந்துதானே தீரும். உங்கடை விசயத்திலையும் அது உங்கட காலத்திலேயே நடந்து முடிஞ்சது நல்லதாப் போச்சுது, என்ற தேனீ தொடர்ந்தது.

அது கிடக்கட்டும் இப்ப ஏன் நான் வரேக்க குழம்பின நீங்கள்?

இன்னும் கொஞ்சக்காலம் இருந்திருந்தா மிச்ச விளையாட்டையும் காட்டியிருப்பன். அதுக்கிடையிலை எல்லாம் பிழைச்சுப்போச்சு என்று சொன்னபடி கைகளைப்பிசைந்தார்.

நீங்கள் நிறையத்திட்டம் தான் வைச்சிருந்திருக்கிறியள் போல ... பின்னை என்ன புலியளுக்கு வெளிநாடுகளிலை இருக்கிற சனங்கள் அள்ளி, அள்ளிக்கொடுக்குதுகள். அதைவைச்சுக்கொண்டுதானே எங்களோட சரிக்குச்சரி நிண்டு களைக்காமல் சண்டை செய்யினம். அவைக்கு அப்பிடி வாறகாசை நிற்பாட்டிவிட்டா எங்களிட்டை சரணடைஞ்சிடுவினம். அப்பிடி வாறகாசை சும்மா நிற்பாட்ட ஏலாது. அதுக்கு உலக நாடுகள் மத்தியில புலிகளுக்கு

பிறகென்ன, நான்பட்ட கஸ்ரம் ரணிலவைக்குத் தெரியுமே. அவை புலிகளோடை பேச்சு நடத்த நிற்கினம், இவையளே இஞ்சை புலிகள் மீதானதடையை நீக்கிவிட்டா பிறகு உலக நாடுகளும் எல்லே நீக்கிப்போடும். அதால எங்கடைதிட்டங்களும் தவிடுபொடியாய் போயிடும் புலிகளின்ரை போராட்டம் நியாயமானது எண்டவிசயம் தெரியவந்தா எங்களைப்பற்றி உலகநாடுகள் என்ன நினைக்கும். திரும்ப நாங்கள் ஆட்சிக்கு வந்தா ஒண்டும் செய்யேலாமல் போயிடுமெல்லே ..

ஓ, உண்மைதான், இப்பவும் நீங்கள் வெளிவிவகார அமைச்சர் தானே.

என்ன வெளிவிவகார அமைச்சரோ? நீர் என்ன சொல்லுறீர் என இழுத்தார் அவர்.

இல்லை. ஜனாதிபதி தன்ரை கட்சி தோத்தாலும் உங்களைத் தானே வெளிவிவகார அமைச்சராய்

போடச் சொல்லி ரணிலுக்கு சிபார்சு செய்தாராம். இப்பபாத்தியளே நீங்கள் தமிழராய் இருந்துகொண்டும் எவ்வளவு விசுவாசமாய் நடந்திருக்கியறிள் எண்டது இதிலை இருந்து விளங்குது தானே. இல்லாட்டி எதிர்க்கட்சியிட்ட போய் என்ரை ஆளை உங்கட ஆட்சியிலை வெளிவிவகார அமைச்சராய் போடுங்கோ அவர்தான் தகுதியானவர் எண்டு வெட்கம்கெட்டு சிபார்சு செய்வாரே என்றார் தேனீயர்,

புன்முறுவல் பூத்த கதிர்காமர் நான் விசுவாசமாய் இருந்து செயற்பட்டபடியால் தானே எங்கடைகட்சி கவிண்டாலும் அம்மா என்னைக் தன்ரை சர்வதேச ஆலோசகராய் நியமித்திருக்கிறார். அவங்கட இனத்தவர்களே அவரை தூக்கி எறிஞ்சிட்டு

தமிழர். இப்பபாருங்கோவன் எனக்கு தமிழும் தெரியாது. சிங்களமும் தெரியாது.

அதுசரி, அதுசரி தமிழே தெரியாத உங்களை ஓர் தமிழன் என்று உலகை ஏமாற்ற சந்திரிகா அம்மையார் திட்டம் போட்டு வெளிவிவகார அமைச்சராக்கி உங்களைக் கொண்டே தமிழரின் போராட்டத்துக்கு எதிராக பிரச்சாரங்களை மேற்கொள்ளவைத்துள்ளார். நீங்களும் சுயநலத்திற்காக இவ்வளவு கீழ்த்தரமான வேலைகளைச் செய்துள்ளீர்கள். நீங்கள் செய்த இந்த துரோகத்தை தமிழினம் ஒரு போதும் மன்னிக்கவோ மறக்கவோ போவதில்லை எனக்கூறிய தேனீ; உள்ளூராட்சி தேர்தலை நம்பியிருந்தியள் சனங்கள் ஒட்டு மொத்தமா உங்களை தூக்கி எறிஞ்சிட்டுதுகளே. இனி என்ன செய்யப் போறியள் என்றது,

ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருந்த கதிர்காமர் திடுக்குற்றவராக ''நான் தேர்தல்மூலம் பதவிக்கு வருபவன் இல்லை. அதாலை இந்த சனங்களோட தீர்ப்பைபற்றி கவலைப்பட்டதே கிடையாது''

நாங்கள் தெரியாமல் விட்ட சில தவறுகளால்தானே ஒரு விபத்து மாதிரி ரணிலவை ஆட்சிக்கு வந்திருக்கினம். இப்ப நாங்கள் அவையின்ர ஆட்சியை கலைக்கிறதுக்குத்தானே திட்டம்போட்டுக்கொண்டிருக்கிறம், பாருங்கோவன்என்ன நடக்கப்போகுதெண்டு. அம்மா தன்ரை அதிகாரத்தை வைத்து தூக்கி எறிஞ்சு விடுவா பாருங்கோவன்- ஓம், நல்ல விசயம் நீங்கள் மாறி மாறி ஆட்சியை கலைச்சு கலைச்சு விட்டிட்டு கதிரையிலை ஏறுங்கோ இஞ்ச நாடு

> ''உண்மையை எத்தினை நாளைக்குத்தான் மறைக்க முடியும் என்னடைக்கோ ஒருநாள் அது வெளியில வந்துதானே தீரும் உங்கடை விசயத்திலையும் அதுஉங்கட காலத்திலேயே நடந்து முடிஞ்சது நல்லதாய் போச்சுது'' தேனீ

நன்றிகெட்டுமற்ற கட்சிக்குத்தாவ நான் தொடர்ந்தும் அவவுக்கு சேவை செய்யிறன். என அவர் தொடர குறுக்கிட்ட தேனீ, அதால தானே அம்மையார் தன்னளவுக்கும் உங்களுக்கும் பாதுகாப்பு வழங்கியிருக்கிறார்.

உங்கடை வாகனங்களைக்கூட பறிக்க வேண்டாம் எண்டு உத்தரவு போட்டிருக்கிறார். தன்ரை மாமனார், ரத்வத்தை, மங்களசமரவீரவுக்கு செய்யாத அளவுக்கு உங்களுக்கு செல்வாக்கு இருக்குது. இதிலை இருந்து வடிவா விளங்கும்தானே

சேட் கொலரை இழுத்துவிட்ட அவர், நாங்கள் தமிழராய் இருந்தாலும் காலம் பூரா சிங்கள தேசத்தில வாழ்ந்து அவைக்கு சேவை செய்துதானே வாறம். என்ரை மூத்த சகோதரர்தானே முதல்கடற்படைத் தளபதி ராஜன் கதிர்காமர், மற்ற மற்ற சகோதரர் சாம் கதிர்காமர், இவர் சட்டவல்லுனராக இருந்தவர். இவற்ற படம் இப்பவும் சுப்ரீம் கோட்டிலை தொங்க விடப்பட்டிருக்கு.

ஓ அப்ப உங்கள் பரம்பரையே சிங்களவர்களுக்கு சேவகம் செய்ய பிறந்தது எண்டு சொல்லுங்கோவன்,

ஓமோம், அதிலை என்ன சந்தேகம். நாங்கள் பெயருக்குத்தானே

அழியிறதைப்பற்றி ஒருத்தரும்கவலைப்படுகிறதாய் தெரியேலை. மக்கள் அழிஞ்சால் என்ன பொருளாதாரம் வீழ்ச்சி கண்டால் என்ன ஆட்சியில ஏறியிருந்து சகல சுகபோகங்களையும் அனுபவிச்சால் போதும் எண்டது தானே உங்கடை கனவு என்றதுசற்று கோபமாகத் தேனீ.

என்ன தேனீக்கு கோபம்வருகுது போல. நீஎரன்ன, ஆர் கோபப்பட்டென்ன? நாங்கள் நினைச்சதை சாதிப்பம்.

சாதிப்பியள், சாதிப்பியள். முந்தி சனம் ஏமாளிகளாய் இருந்தினம். நீங்கள் பிழைச்சியள் இனி இதெல்லாம் சரிவராது.

அடுத்தடுத்து சந்தித்த தோல்வி மூலம்எண்டாலும் பாடம்படிக்காட்டி கஸ்ரம்தான் என புறுபுறுத்ததுதேனீ

எங்களுக்கும் விளங்கும் தேனீ உமக்கு அரசியல் அறிவு பத்தாது போல கிடக்கு மக்களை எப்படி எங்கட பக்கம் இழுக்கிறது என்ற கலையை நாங்கள் கற்றிருக்கிறோம். அதால இந்த சனங்களைப்பற்றிநாங்கள் கவலைப் படமாட்டோம்.

நீங்கள் கவலைப்படாமல் இருக்கலாம். ஆனால் ரணில் உங்கடை தலைவியையே தூக்கி எறிய தருணம் பாத்திருக்கிறாரே. விரைவில் அது நடக்கும் எண்டு இங்க பரவலாக பேசிக்கொள்றாங்களே. எனத் தெரிவித்த தேனீ அப்பிடி அம்மா அதிகாரம் பறிபோனால் உங்கடை பதவியும் எல்லே பறிபோய் விடும். அதுக்குப்பிறகு யாருக்கு சர்வதேச ஆலோசகராக இருக்கப் போறியள். அனுராவுக்கா? எனக் கேள்வி எழுப்பியபடி விருக்கெனப் பறந்து வெளியேறியது.




# சந்தேகம் தீர்க்க வந்த குடிமகன்

மாதம் மும்மாரி பொழிந்து வந்த மழை திடீரென தன் இயல்பை மாற்றிவிட்டது. மழை இல்லாததால் நிலத்தில் வரட்சி ஏற்பட்டது. ஆறுகளில் நீர் வற்றியது குளங்களிலும் நீர் இல்லாததால் கால்நடைகள் எல்லாம் அழிந்து போகின்றன.

இவைகளை அறிந்த அந்நாட்டு மன்னனுக்கு பெரும் அதிர்ச்சியாக இருந்தது. தொடர்ந்தும் மழை இல்லாமல் போனால்-நாட்டில் அழிவுகள் பெருகி நாடு சுட்டிச் சுவராய் போய்விடும் என்பதை நினைத்து பெரும் கவலையடைந்தான் மன்னன்.

நாட்டிலுள்ள சோதிட வல்லுனர்கள் அனைவரையும் அழைத்தான். மழை பெய்யாதது ஏன் என்று கேட்டான் மன்னன். சோதிட நூல்கள் எல்லாவற்றையும் ஆராய்ந்த வல்லுனர்கள் இன்னும் ஆறுமாதங்கள் மழை பெய்யாது என்று கூறினார்கள்

''ஆறுமாதமா?'' மன்னன் திகைத்துப் போனான்' நீதி, நேர்மை, நியாயம் உள்ள நாட்டில் இப்படி மழை இல்லாது போகவா?

நேர்மை இல்லாத மக்கள் நியாயம் இல்லாத அரசு அமையும் நாட்டில்தான் மழை பெய்யாது என்பார்கள்.

மன்னன் குழம்பினான். தனது அரசவைக் குழுவினரால் தீர்க்கமுடியாத பிரச்சினையை பொதுமக்களில் புத்திகூர்மை யானவர்களால் தீர்த்து வைக்கமுடியும் என நம்பினான்.

உடனேயே 'நாட்டு மக்களுக்கு முரசறைந்து நிலமைகளை தெரிவியுங்கள் என அரசவைக்கு கட்டளையிட்டான் மன்னன்.

''நமது நாட்டில் இப்போது மழை இல்லாத நிலைமைக்கு சரியான காரணம் சொல்லும் குடிமகனுக்கு நமது மன்னன் பரிசு வழங்கிக் கௌரவிப்பார். சரியான காரணம் தெரிந்தவர்கள் மட்டும் நாளை காலை அரசவை கூடும் நேரத்தில் மன்னரைச் சந்திக்கலாம்'' என நாடெங்கும் முரசறையப்பட்டது.

இந்த அறிவிப்பைக் கேட்டவர்களில் மகேஸ்வரன் என்ற இளைஞனும் ஒருவன். அவனுக்குத் தொழில் விவசாயம். பொழுது போக்கு வேட்டையாடுவது வேட்டைக்குப் போனவனுக்குத் தெரிந்த ஒரு உண்மையை மன்னனிடம் சொல்லி விடுவது என முடிவு செய்தான்.

மன்னன் அரசவையில் இருக்க அந்த இளைஞன் கையில் ஒரு பொட்டலத்தைக் கொண்டு சென்றான். இளைஞனைக் கண்ட மன்னன் தனது சந்தேகம் தீர்க்க வந்த குடிமகன் என மகிழ்ந்தான்.

''இளைஞனே மழை பெய்யாததன் காரணம் என்ன? என்று மன்னன் கேட்டான். இளைஞன் பதில் ஒன்றும் சொல்லவில்லை. கையிலிருந்த பொட்டலத்தை மன்னனிடம் கொடுத்தான். மன்னன் பிரித்தபோது உள்ளே காய்ந்த சருகுகள் இருந்தன.

மன்னனுக்குக் கோபம் வந்து விட்டது. அதைக் காட்டிக் கொள்ளாமல்

''இளைஞனே இதென்ன? என்றான் மன்னன்.

''காய்ந்த இலைச் சருகுகள் மன்னா!''

''தெரிகிறது. இந்தச் சருகுகளுக்கும் மழை பெய்யாததுக்கும் என்ன காரணம்?'' என்று மன்னன் கேட்டான்.

''காரணம் இருக்கிறது மன்னா... நான் இந்த காய்ந்த சருகுகளை எடுத்து வந்தது வேட்டைக்குப் போனபோது அங்குள்ள மரம் ஒன்றில்'' என்றான்.

''மரத்தில் காய்ந்த சருகுகளா?'' மன்னன் வியந்து கேட்டான்;

''ஆமாம் மன்னா- அந்த மரங்கள் வெட்டப்பட்டு சாய்ந்து இருந்தன'' என்றான்.

''இளைஞனே... இன்னும் விளக்கம் தேவை'' என்றான் மன்னன்.

''மன்னா நமது நாட்டில் ரகசியமான முறையில் காட்டிலுள்ள மரங்களை வெட்டுகிறார்கள், நாட்டில் மழை ஒழுங்காகப் பெய்ய காட்டிலுள்ள மரங்கள் அழிக்கப்படாமல் இருக்க வேண்டும்.

மன்னனுக்கு இப்போது உண்மை புரிந்தது.

''இளைஞனே... இதை முன்னமே எனக்குக் கூறி இருக்கலாமே...''

''நாட்டில் நடக்கிறதெல்லாம் மன்னனுக்குத் தெரிந்திருக்கும் என்று நினைத்தேன்.''

தயக்கத்துடன் இளைஞன் சொன்னான் மன்னனுக்கு வெக்கம் வந்தது- மன்னன் அமைச்சர்களை கோபமாகப் பார்த்தான். எல்லா அமைச்சர்களும் தலைகளைக் குனிந்தார்கள்.

''இளைஞனே... உடனடியாக வெட்டப்பட்ட இடங்களில் புதிய மரங்கள் நடவேண்டும். நாட்டிலே மழை பெய்தால்தான்- மக்களின் வறுமை தொலையும்-இந்த அரண்மனையின் தலைமை அமைச்சர் தான் மரங்கள் நடுவதை மேற்பார்வை செய்ய வேணும் உரிய நேரத்தில் உண்மையை உணர்த்திய நீதான் இந்த அரண்மனையின் புதிய அமைச்சர் இனி..'' என்றான் மன்னன்.

இளைஞனுக்கு மிகவும் சந்தோசமாய் இருந்தது.

○ பிரஷகி




இங்கு ஆறு 'சீல்' பிராணிகள் பார்ப்பதற்குஒன்று போல் உள்ளன. ஆனால் இவற்றில் ஒன்று மட்டும், மற்றவற்றிலிருந்து வேறுபட்டுள்ளது. அது எது? அதுஎப்படிமற்றவற்றிலிருந்து வேறுபட்டுள்ளது?

## அப்பம்

அக்கா வீட்டை போனேன்
அப்பம் சுட்டுத்தந்தா
மிக்க ஆசையோடு
வேண்டு மட்டும் தின்றேன்

மிளகாய்ச் சம்பலோடு
வெள்ளை அப்பம் ரெண்டு
அளகில் சுட்டு வைத்தா
தொட்டுத் தொட்டுத் தின்றேன்.

பாலப் பத்தின் மீது
பாணிச் சீனி தடவி
மேலும் ரெண்டு தந்தா
வேண்டியதையும் தின்றேன்.

○ கொக்கூர் கிழான்

## ஆலமரம்

ஆலமரம் கிளைகள் பரப்பி அழகாக இருக்கும்
ஆலமரக்குச்சி பல்லுவிளக்க உகந்தது
ஆலமரம் விழுதுகள் விட்டு வளரும்.
அதன்கொப்பிலே பறவைகள் கூடுகட்டிவாழும்
ஆலமரத்தின் கீழ் பள்ளிச் சிறுவர்கள்
மாலை நேரத்தில் விளையாடுவார்கள்.

கு. ஆர்த்திகா
தரம்-2
மு-ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை
புதுக்குடியிருப்பு.

## புதிர் —5

(விளையாட்டுக் கணக்கு)

1) ஆசிரியர், மாணவன் ரதனை நோக்கி ''100-ஐயும் 150-ஐயும் தனித்தனியாகக்கூட்டினால் எவ்வளவு'' என்று கேட்டார். முத்து ''250'' என்று கூறினான். ஆசிரியர் ''இல்லை 7 தான்'' என்றார் விளையாட்டாக! எப்படி?

2) மேலிருந்து கீழாக இடமிருந்து வலமாக எப்படிப் பெருக்கினாலும் 120 வரும்படியாக மூன்று எண்களிலுள்ள மூன்று வரிசைகளை எழுதவேண்டும். முடியுமா?

## புதிர் 04 இன் விடைகள்

1)
5 × 5 = 25
5 × 5 = 25
5 X 5 = 25
5 X 5 = 25
$\overline{100}$ + 5 - 5 = 100

2) சக்தியின் வயது 5 எப்படி?
சக்தியின் வயது அவன் மாமாவின் வயதில் 5 இல் ஒருபங்குஎன்றால், மாமாவின் வயது 25. 25 ஐ 2ஆல் வகுத்தாலோ அல்லது 3, 4, 6, 8 ஆகிய எண்களால் வகுத்தாலோ மீதி வரும்... எனவே சக்தியின் வயது = 5.

## புதிர்-3இல் சரியானவிடைஎழுதியோர்

| | |
|---|---|
| ஞா. கருணாகரன் | கு. ஜனகன் |
| [illegible] | சி. கவிதா |
| ஆ. ஆரபி | ப. லதாஜினி |
| வ; மருதா | அறிவழகன் |
| ச; காஞ்சனா | குழலி |

○ பரிசுக்குரியவர்:-

ச.நிவேதா.
முள்ளியவளை/நீராவி,
விசுவமடு.

இருளகன்று ஒளிபரவும்
இந்த நேரமதிலே; எம்
தேசமதில் அமைதி நிலை
என்றும், என்றும் தோன்றட்டும்
புது வருட வாழ்வோடு
புன்னகைகள் பல சிந்தி; தமிழர்
புதுப் பொலிவாய் வாழட்டும்.
புதுமை பல செய்யட்டும்.


எமது வாடிக்கையாளர்கள்,
நண்பர்கள் அனைவருக்கும் இனிய
புதுவருட நல்வாழ்த்துக்கள்.

## ரவி அன் ராஜ் சில்க்ஸ்

77, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.


நீண்ட பல இன்னல் யாவும்
இன்றோடு, தொலையட்டும்
பூண்டு கொண்ட இனப்போரோ
புதைகுழியில் போகட்டும்.
நாண்டு கொண்டு, எம் வாழ்வை
நசிப்பவர்கள் மறையட்டும்; நாளை
ஆண்டு பிறக்கும் வேளையிலே; நல்
ஆனந்தம் பல நிலவட்டும்.


இனிய உறவுகள் அனைவருக்கும்
எமது சித்திரைப் புத்தாண்டு
நல் வாழ்த்துக்கள்.

## சிவகணேசன்
## புடவை மாளிகை

41, பெரியகடை, யாழ்ப்பாணம்.



வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
எமது சித்திரைப் புதுவருட நல்வாழ்த்துக்களை
தெரிவித்துக் கொள்கின்றோம்;

## ஜீ.எஸ். லிங்கநாதன் அன்கோ

13- 14, பெரியகடை, யாழ்ப்பாணம்.



வன்னியில் இருந்து வரும் இனிய உறவுகளுக்கும்,
எமது வாடிக்கையாளர்கள், நண்பர்களுக்கும்,
சித்திரைப் புதுவருட நல் வாழ்த்துக்கள்!

## மகாராணி பட்டுச் சோலை

50, பெரியகடை, யாழ்ப்பாணம்.


அகதியாக ஓடி.... ஓடி...
ஆத்தலைஞ்ச வாழ்வகன்று; இனி
உரிமையோடு ஓரிடத்தில்
ஒற்றுமையாய் நாம் வாழ்ந்திடுவோம்!


அனைத்து புடைவைகளுக்கும்
யாழ் நகரில் நீங்கள் நாட வேண்டிய இடம்.

## காவேரி சில்க்ஸ்

48, பெரியகடை, யாழ்ப்பாணம்.



அனைவருக்கும் எமது புதுவருட நல்வாழ்த்துக்கள்.

கண் பரிசோதித்து கண்ணாடி வழங்குபவர்,
பல் கட்டுபவர், மிதப்புப் பற்களுக்கான
கிளிப் பொருத்துபவர்கள்

## பி. ஜெ. பர்னாண்டோ

உரிமையாளர்- லயன், ஏ. ஜெயக்குமாரன்

343, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்

# இன்னொரு போர்முகம்

மறுநாள் அவர்கள் உப்பாறு சென்று குணமண்ணையைச் சந்தித்துக்கதைத்து விட்டு மறுநாள்வருகின்றனர். ''மச்சான் நடந்தே ஒரு வயலைசக்கழிச்சிட்டம். அனா உருப்படியா ஒன்றும் செய்யவில்லை'' அவன் குரலில் ஆதங்கம் விளங்குகிறது றெஜி வரைபடத்தைப் பார்த்தவண்ணம் ஆழமாக யோசிக்கின்றான். '.சும்மா இருப்பதிலும் பார்க்க ஏதாவது முயற்சிக்கலாம்'' என்று எண்ணியவனாக ''அருண் தம்பலகாமம் கடல் நீரேரிப்பக்கம் போய் பார்த்தால் என்ன?'' என்று கேட்க அவனும் வரைபடத்தை சிறிது பார்த்தவண்ணம்''ம் ரைபண்ணிப்பார்ப்பம் வழிகாட்டி எப்ப வருவாரோ தெரியாது'' என்கிறான்.

அடுத்தநாள் மீண்டும் அவர்கள் தங்களுக்கு தேவையானவற்றுடன் நடக்கத் தொடங்குகின்றனர். இரண்டு நாட்களாக பெய்த மழையினால் நிலங்கள் அனைத்தும் சதுப்பு நிலங்களாகவும், சிறு ஏரிகள் ஓடைகளாகவும், குளங்கள் ஆறுகளாகவும் தோற்றம் பெற்றிருந்தன உடல் உளக்கஸ்ரங்களேவழமையாகிவிட்டதனால் அவற்றை இவர்கள் சிறிதும் கருத்தில் எடுப்பதாகத் தெரியவில்லை எங்கோடி உறவுகளுக்காய் போர்ச்சிலுவை சுமக்க புறப்பட்டவர்கள் இவற்றைத் தாங்கித்தானே ஆகவேண்டும்.

குறித்த நீரேரியை வந்தடைந்துவிட்டார்கள். காலைமுதல் மாலைவரை அதனை அவதானித்துவிட்டு அதனுள் இறங்கி சுற்றுமுற்றும் பார்த்தவண்ணம் முன்னேறுகின்றார்கள்.

இவர்களின் கஸ்ரகாலம் கடற்படையின் ரோந்து விசைப்படகுகள் தென்படுகின்றன. இல்லை இவர்களின் அதிஸ்டம் அவர்கள் இவர்களை இனம் காணவில்லை. உடனே கரைக்குத் திரும்பியவர்கள் அடுத்த நாளும் அங்குநின்று அக்கடற்பரப்பை அவதானிக்கின்றார்கள். எழுந்தமானமாகவரும் ரோந்துப் படகுகளின் நடமாட்டம் கண்காணிப்பின் முக்கியத்துவத்தை விளக்குகின்றது. நீண்டகாலமாக இப்பிரதேசங்களில் தாக்குதல்கள் நடைபெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இத்திட்டத்தையும் கைவிட்டு தம்மறைவிடம் மீளுகின்றனர்.

மறுநாள் காலை 8.30 மணியிருக்கும் அக்காட்டுப் புள்ளினங்கள் வழமைக்கு மாறாக ஒலிகளை எழுப்புகின்றன, இவர்களின் காட்டனுபவம் எச்சரிக்கை உணர்வை தூண்டிவிடுகின்றது. தங்கள் காதுகளைக் தீட்டியவாறு ஒவ்வொருவரும் ஒவ்வொரு திசையில் உற்றுநோக்குகின்றனர். காட்டுக்கு வெளிவெட்டையில் நின்று இருவர் கூ..கூ. எனக்குரல் எழுப்புவது இவர்களுக்குக் கேட்கிறது சுமார் 100 மீற்றர் தூரமளவில் சிங்கள இராணுவ சிப்பாய் ஒருவன் வருகிறான். அவனது கைகளில் ரி-56-2 துப்பாக்கியொன்று தயார் நிலையில் இருக்கின்றது. அவனது பார்வையும் தனிய இங்குவரும் தன்மையும் மறைவிட்டூறல் இருப்பதையும் சேர்த்து நோக்கும்போது அவன் வேட்டைக்குத்தான் வருகின்றான் எனக்கணிக்க முடிகின்றது. இவனுடன் தொடர்பைப் பேணுவதற்காகவே மற்றவர்கள் சிக்னல் இடையிடையே கொடுத்தவண்ணமுள்ளனர்.

இப்பிரதேசத்தில் இவர்களாக ஒரு தாக்குதல் தொடுப்பது என்பது அறுவரும் தற்கொலை செய்வதற்கு ஒப்பானதாகும். மேலும் இவர்கள் வந்த பணியும் தடைப்படலாம். இப்பகுதியில் அருகாமையில் இராணுவ, பொலிஸ் முகாம்கள் இருக்கின்றன. இக்கட்டான இச் சூழ்நிலையில் என்ன செய்யலாம்? எதுவும் செய்ய முடியாது. மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் ஏற்படும் தவிப்புப்போன்றது. எல்லோரும் தம்மை மெல்ல மெல்ல உருமறைத்துக்கொள்கின்றனர். ஒருவன் மட்டும் தனது துப்பாக்கியை அதாவது முனையை அவன் பார்புக்கு நேரே இணைத்தவண்ணம் சிற்றிங் பொசிசனில் நிலை எடுக்கின்றான். இவர்கள் இருப்பை அறியாமல் வந்துகொண்டிருந்தவன் கண்களில் இவர்கள் படுப்பதற்கு விரித்துவிட்டு அப்படியே விட்டிருந்த பச்சை நிறப் பொலித்தீன் படடுவிடுகின்றது. அவனுக்கு சந்தேகம் பொறிதட்டுகின்றது. சிறு தவறு இவர்களைக்காட்டிக்கொடுத்து விட்டது. உசாரடைந்த அவன் லேசர் பார்வையால் சூழலை ஊடுருவிப்பார்க்கின்றான் இவனை நோக்கி அவன் திரும்பிதான் குறிவைக்கப்பட்டிப்பதைக் காணவும் அதிர்ச்சி அலைகளை முகம் பிரதிபலிக்கவும் சுதாகரித்து மின்னல் வேகத்தில் அவன் இவனை நோக்கித் தன் துப்பாக்கியைத் திருப்பவும் இவன் துப்பாக்கிக் குண்டுகள் இரண்டு டுமீல்.. டுமீல்.. என அவன் மார்பைத் துளைக்கவும் குபீரென இரத்தம் முன்னோக்கி கொப்பளிக்கவும் அவன பின்னால் எகிறி விழவும் இவன் பாய்ந்துசென்று அவன்



வாயைப் பொத்தியவண்ணம் தன் இடையில் இருந்த கத்தியை உருவி அவன் கழுத்தை அறுக்க அவன் பிரதான சிரசு நாடிகளில் இருந்து இரத்தம் சீறியடிக்கவும் என எல்லாம் சில கணங்களில் நடந்தேறிவிடுகின்றன. அவன் மூச்சும் மெல்ல மெல்ல அடங்குகின்றது. எது நடக்கக்கூடாது என அடிக்கடி கவனம் எடுத்தார்களோ அது நடந்துவிட்டது. இதனால் ஏற்படப்போகும் ஆபத்தை உணர்ந்த இவர்களின் வேகம், பட்டாஸ்திரியில் பற்றிய தீயாகின்றது

இறந்த வீரனிடம் இருந்த ரீ-81 துப்பாக்கி, தலைக்கவசம், கோல்சர் என்பவற்றை அவன் கழற்றுகின்றான் வெளியில் நிற்கும் மற்றவர்கள் இவன் ஏதோ வேட்டை மிருகமொன்றைச் சுட்டுவிட்டான் என எண்ணி மகிழ்ச்சிக்குரல் எழுப்புவது விளங்குகின்றது. அந்நேரம் எதிர்பாரா இன்னுமொரு அதிர்ச்சி இவர்களை வந்தடைகின்றது. சற்றுத் தூரத்தில் வேறு இரு இராணுவத்தினர் இத்திசைநோக்கி வந்தவண்ணமுள்ளனர். நல்லவேளை இவர்களை அவர்கள் இன்னும் அவதானிக்கவில்லை. உடனேயே இவர்கள் பற்றைக்குள் புகுந்து மள மளவென ஊர்ந்துசெல்கின்றனர். இவர்கள் 25 மீற்றர் சென்றிருப்பார்கள் இப்போது வெளியில் நின்ற இரு இராணுவத்தினரும் உள்ளே நின்றவர்களுடன் சேர்ந்துகொள்கின்றனர். இறந்தவனைத் தேடிக்குரல்கொடுக்கின்றனர் அவர்கள் சிங்களத்தில் எச்.ரி.ரி காறங்கள் தான் சுட்டிருப்பாங்களோ ''இங்க எப்படி அவங்கள் வாறது...'' அவர்களின் உரையாடல் இவர்களுக்குக் கேட்க அந்தநிலையிலும் இவர்களுக்குச் சிரிப்பு வருகின்றது.

சில கணங்களில் அவர்கள் கண்களில் இறந்தவன் சடலம் தென்பட அவர்கள் ''கா... கூ.. கே...'' என ஏதேதோ கத்துவதும் வோக்கியில் பலமாகக் கதைப்பதும் இவர்களுக்குக் கேட்க தங்களுக்குள் ஒருவரையொருவர் பார்த்துக்கொள்கின்றனர். அப்பார்வையில் ''சரி இதோட எங்கட கதையும் முடியப்போகுது'' எனும் கருத்து பிரதிபலிக்கின்றது. தலைக்கு மேல் வெள்ளம் சாண் ஏறினால் என்ன? முழம் ஏறினால் என்ன? தப்பிக்க முயற்சிக்க வேண்டியது தான். என ஒன்றாக எண்ணியவர்களாக வேட்டை நாயால் கலைபடும் உடும்புகள் போல் சரசரவென ஊர்கின்றார்கள். காடு தாண்டி வெட்டையினுள் வந்துவிட்டனர். நல்லகாலம் அதிஷ்டம் இவர்கள் பக்கம் இருந்திருக்க வேண்டும். இராணுவத்தினர் காட்டின் மறுபக்கம் சென்று ஒவ்வொரு பற்றையாகச் சுடுகின்றனர்.

(தொடரும்)

○ தூயவன்

# ஊர்கோலம்

இப்போது சிறிலங்காவின் ஜனாதிபதியை அதாவது சந்திரிகாவை அதிகம் குழப்பமடையவைத்துள்ள விடயம் பொதுசன ஐக்கிய முன்னணி உடையப்போகிறது.என்று பரவலாக அடிபடும் செய்தியேயாகும்.

முன்னர் என்றால் ஆட்சியும் அவரின்கீழ் இருந்தது. அதிகாரமும் அவரிடம் ஏராளமான அளவுக்கு இருந்தது. கட்சி உடையப்போகிறது என்று உணர்வாரேயானால் பதவிகளை உருவாக்கி உடைத்துக் கொண்டு ஓடவெளிக்கிடுபவர்களை அதில் ஒட்டவைத்து உடைவைத் தடுத்துவிடுவார்.

ஆனால் இப்போது அது இரண்டுமே இல்லாமல் போய்விட்டது. ஆட்சி கைநழுவிப் போய்விட்டது. அதிகாரம் செலுத்தமுடியாதுள்ளது. இப்படி ஒரு குழப்பத்தை, எதிர்கொள்ள வேண்டிய நிலை அவருக்கு ஏற்படும் என்று அவரே எதிர்பார்த்திருக்கமாட்டார்.

இதுதான் அரசியல். நிச்சயமின்மையும், நிரந்தரமின்மையும் அரசியலில் மிகவும் உறுதியான விடயங்கள்தானே!

ஆனால் சில காலம் எல்லோரையும் எல்லாவகையிலும் குழப்பியவருக்கே இந்தநிலை வந்தது தான் 'விதி'.

அரசு அன்று கொல்லும், தெய்வம் நின்று கொல்லும்... ஆனால் மக்கள் என்றும் கொல்வர் என்பது தான் ஜனநாயக தத்துவம்.

''ஆடிய ஆட்டமென்ன? பேசிய வார்த்தை என்ன? சேடிய செல்வமென்ன? திரண்டதோர் சுற்றமென்ன?''

இது கண்ணதாசன் எழுதிய பிரபலமான திரைப்படப் பாடல் ஒன்றின் சில அடிகள்...

இப்போது இந்தப்பாடல் வரிகளுக்கு பொருத்தமானவராக இருப்பவர் ஜெனரல் மாமா அனுருத்த ரத்வத்தை தான்.

வெலிக்கடையும், பேசெம்பரையும். மருத்துவமனையுமென அவரும் அவரது புதல்வர்களும் செய்திகளில் அடிபடும்விதம் தான் வேடிக்கையாக உள்ளது.

யாழ்ப்பாணத்தில் கொடியேற்றி, மாங்குளத்தில் நடனமாடி கண்டி வீதியைப்பிடித்து பிரபாகரனுடன் கைகுலுக்குவேன் என்றவரின் கைகளில் விலங்கு. கைபிடித்துப்பார்ப்பவர் டொக்டர் கைதட்டி சிரிக்கிறதோ உலகம்..

ஒரு கைதியின் கையறு நிலை என இதனைச் சொல்லலாமா?

உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பின்னர் ஜே.வி.பியினர் உடைந்து போய்விட்டனர். சிஹல உறுமயக்காரர் சிதைந்து போய்விட்டனர்.

பௌத்த சிங்கள மக்களே இப்படி ஒரேயடியாதத் தூக்கி எறிந்துவிட்டமை அவர்களால் ஜீரணிக்கமுடியாத விடயமாக உள்ளது.

ஆனானப்பட்ட அதிகார அம்மணியின் பாடே 'அச்சச்சோ' என்று சொல்லும்படியாகவிட்ட நிலையில்.. இவர்கள் நிலை எம்மாத்திரம்?

புத்தமும் கைவிட்டுவிட்டது... யுக்தமும கைவிட்டுவிட்டது... அவர்களின் சத்தமும் ஒடுங்கிவிட்டது.

இதற்கு காரணம் அமெரிக்காவின் சதி என்றோ, நோர்வேயின் சதியென்றோ அல்லது புலிகளின் சதியென்றோ கூட அவர்கள் புலம்பக் கூடும்!

எதுவானாலும் அடுத்ததேர்தல் வரும்வரை ஆர்ப்பாட்டம், பேரணி, அறிக்கைகள் போன்றவை மட்டுமே அவர்களின் இருப்பினை உணர்த்த உதவும்... வேறென்னதான் செய்ய முடியும்?

அமைச்சராக இருந்து, பிரதமராகி, எதிர்க்கட்சித் தலைவர் எனு இறங்கி வெறும் பாராளுமன்ற உறுப்பினராக மட்டும் இருக்க வைக்கப்பட்ட அந்த சிங்கள பௌத்த பிரமுகர் ரட்ணசிறி விக்கிரமநாயககாவை நினைவிருக்கிறதுதானே..!

சில காலம் ஆளைக்காணவில்லை என்றுகூடத் தேடினார்கள் வீட்டிலும் அவருக்குப் பிரச்சினை... நாட்டிலும் அவருக்குப் பிரச்சினை.

பௌத்த விகாரைகள் மூலம் இராணுவத்திற்கு ஆட்சேர்க்க நினைத்த போர்வெறிகொண்ட இந்த நபர் இப்போது விடுத்திருக்கும் கோரிக்கை பொங்கு தமிழ் நிகழ்வுகளை தடை செய்யவேண்டும் என்பதாகும்.

இனவாதம் பேசாமல் தங்களின் இருப்பை இனங்காட்ட முடியாத பரிதாப நிலையிலேயே இவர்கள் இருக்கிறார்கள்.

தமிழையும், தமிழர்களையும் அழித்து ஒடுக்க நினைப்பவர்களுக்கு தமிழ்-தமிழர் என்ற சொற்கள் தான் 'உயிர்ப்பை' வழங்கி வருகிறது என்பதே வேடிக்கையான விடயம்.

● கேதாரன்

# கொண்ணரை பார்த்திட்டு ஓடி வாறன்..

**ரேணுகா செயறூபன்**



> எரிந்துபோனஒற்றைக் கிராமம் மேற்கு மூலையில் கிளைகளையெல்லாம் இழந்து போன இரட்டை மாமரம். புதிதாக... இளம்பச்சைத்தளிர்கள் தளிர்த்திருந்தன. தெருநெடுகிலும் உச்சிகள்சிதைந்துபோன பனைகள்...அவற்றின் ஊசிநிழலில் ஓரிரு மாடுகள் தவிர ஜீவநடமாட்டமேயில்லை. சல்லடையாகிப் போனசுவர்கள், இன்னமும் உடைசல் கூரைகளைத் தாங்கியபடி...

## சிறுகதை

**அ**வர்கள் எறும்புச் சாரியைப் போல ஒற்றை வரிசை கட்டி நகர்ந்து கொண்டிருந்தார்கள். முகங்களில் கனமானகளைப்பு அப்பியிருக்க ஒவ்வொரு அடி நகர்விலும் சாதுரியமான நிதானம் தெரிந்தது நீண்ட தூர நடைசாரி முதுகை அழுத்திய சுமைகளைச் சற்று இறக்கி ஆறமாட்டோமோ என்ற ஆதங்கக்கோடுகள், அடி உதட்டை அழுந்தக் கடித்து, வேதனைகளை விழுங்கிவிடத் துடிக்கும் போராட்டம்.

ஸ். சு... ஒற்றை விரலால் மெல்லிய எச்சரிக்கை. இனி, அரைமைல் தூரத்திற்குச் சருகுகள் கூடச் சரசரத்து விடக்கூடாது. சுற்றுப் புறம் முழுவதையும் ஒரு முறை அலசி காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டுநுனி விரல்களால் நகர்ந்து நகர்ந்து சற்று மேட்டிறிமெல்லஇறங்கி சமதரைக்கும் வந்த பிறகு தான் மூச்சுவந்தது

'அப்பாடா... இப்போதைக்குத் தப்பி விட்டோம்; அவர்கள் தனாவின் உத்தரவிற்காக காத்திருந்தார்கள். ஒரு மணி ஓய்வு. குளிப்பு, சாப்பாடு எல்லாம் இந்த ஒரு மணித்தியாலத்திற்குள் தான்

''என்னசரியோ''? தகவல் மள மளவென்று பறந்தது. பிஸ்கட் பொட்டலத்தாள்கள் காற்றில் ஊர்வலம் நடத்தின... தனா, தனக்குள் சிரித்துக் கொண்டான்

''பாவம் பொடியள் நல்லாய்க் களைச்சுப் போட்டாங்கள்''

சற்றுநேரம் அவர்களின் மோதல்களை, சேட்டைகளை வேடிக்கை பார்த்தவனின் நெஞ்சில் வேதனை நிரம்பி வழிந்தது. இவர்களெல்லாம் தத்தம் சொந்தங்களோடு... உறவுகளோடு... எப்போதாவது ஒரு நாள் சேர்ந்து...

அது சாத்தியமா?

ஊரோடு ஒன்றியிருந்தஎச்ச சொச்சச் சனங்களும் ஒன்றொன்றாக ஊரை விட்டுத் தேசம் விட்டு ஓடிப் போன பிறகு...?ம்... பொந்தான்களை விலக்கிக் குளிர் காற்றை அப்படியே நெஞ்சில் வாங்கினான். அப்பாடா... ஆற்றில் நூல்போலநீரோடிக் கொண்டிருந்தது. கரை நெடுகிலும் ஆற்று நண்டுகள் சற்று நிதானித்து நிலைமை உணர்ந்து, குறுக்கும் நெடுக்குமாக ஓடத்தொடங்க ஒன்றொன்றாக அடித்துப் போட்டான் சங்கர்.

''டேய் சங்கர் அதுகள் என்னடாபாவம் செய்ததுகள்...

பாவமோ அப்ப என்ரை அப்பா, தங்கச்சி என்னபாவம் செய்தவை. அவங்கள் அப்படி ஏன் செய்தவங்கள்...?'' இறுதி வார்த்தைகள் உதட்டு மடிப்புக்குள் உருச்சிதைந்து போக முகத்தசைகள் இறுகி விறைத்துத் துடிப்பது தெரிந்தது.

''சங்கர்...'' தனாவின் குரல் கலைந்தது. சட்டென்று எழுந்து நின்றான்; சங்கர். சங்கரில் தனாவிற்குப் பிடித்ததெல்லாம் இந்தப் பணிவும் சுறுசுறுப்பும்தான். ''இப்படி வா...'' சங்கர் வந்து ஒரு அடி இடைவெளி விட்டு உட்கார்ந்தான்.



விரல்கள் வெறுமனே மணலை அளைய விழிகள் நட்சத்திரப் பொட்டுக்களைத் தொடுவானில் தொட்டிருந்தன.

''சங்கர் உனக்கு எத்தனை தரம் சொல்லியிருக்கிறன்: பழையதையெல்லாம் அப்பிடியே விட்டிடு எண்டு யாருக்கில்லை துயரம்... எந்தத் தமிழன் காயபபடவில்லை சொல்லு? சதைப்புண் மனப்புண் என்று - எத்தனை நிரந்தரக்காயங்கள்...? உனது சோகம் ஒரு கோடு என்றால் என்னது இன்னொரு கோடு, எந்த ஒரு துயரத்திற்கும் முடிவு சாவும் பைத்தியமுமென்றால்...

சங்கர் டேய் எங்கடை தமிழரிலை எத்தினை பேர் விசரங்கள் தெரியுமே? நீயும் விசரன் நானும் விசரன். நினைத்துப் பார்த்தால் எல்லாரும் விசரங்கள்'' சற்று ராகமாக இழுத்துப்பாட இப்போதும பேசாமலிருந்தான் சங்கர்.

கண்களில் மெலிதாக நீர் படர்ந்தது. கீழ் இமைகளில் முத்துக்கட்டியது உருண்டது சங்கர் அழுகிறானா? அழுவான் எப்போதாவது சதையைப் பிய்த்துக்கொண்டு வலிக்கிறபோது.

மருத மரங்கள் கோடு போட்ட ஆற்றை அடுத்த வெண்மணல் கிராமம் அரிவாக்கரை... செந்தமிழும் சிங்களமும் சிந்துபாடிய ஊர்...

ஒருநாள் அந்தக் கிராமம் நட்ட நடுச் சாமத்தில் பிய்த்தெறியப்பட்டது. கண்ணாலே கண்டவன் சங்கர் உணர்வுகள் செத்துப்போன விழிகளோடு ஒவ்வொரு வதையையும் உள்வாங்கியவன்.

ஊரில் மத்தியிலிருந்த பெரிய ஆலமரத்தின் உச்சிக்கு இறகுகள் பிய்ந்து போன பறவைபோல. உட்கார்ந்திருந்தான் சங்கர். ஊர் மொத்தமும் அப்படியே தெரிந்தது. சொக்கப்பனை எரிவது போலப் பற்றிக் கொண்டு எரிந்தது. கடைத்தெருவிற்குள் வீச்சரிவாளோடும் பெற்றோல்டின்களோடும் அவர்கள் நுழைந்தபோது தான் திக்கென்றது.

''மத்தியூமாத்தயா... சற்றுக்குள்ளமாக முகம் முழுவதும் பூப் பூவாகச் சிரிக்க மட்டுமே தெரிந்த மத்தியூ. எத்தனைமுறை வீட்டிற்கு வந்திருக்கிறார்; அரிசிகட்ட. அந்த மத்தியூதான் காளிகோயில் பூசாரியைப்போலக் குதித்தபடி முன்னே...

இதோ சங்கரின் கடை உடைக்கப்படுகிறது உள்ளே படுத்திருந்த அப்பாவை யாரோவெளியே இழுத்து வருகிறார்கள். நெருப்புப் பந்துகள் குபீர் குபீர் எனப் பறக்கின்றன. அப்பா எழுந்திருக்க முனைகிறார். அருகிலேயே வீடு? அம்மா அலையக்குலைய ஓடிவருகிறாள். பின்னாலேயே அம்மணமாக மூன்று வயது தங்கச்சிசுஜா... அதன்பிறகு எதுவும் நினைவில்லை. பயத்தில் உடம்பு உதறி உதறிப் போட்டது.

கருகிய சடலக் குவியல்களுக்குள் அழுகையை வேதனையை மனஉடைப்பை மிஞ்சிய மரத்துப்போன சோகத்துக்குள் அவர்களைத் தேடித் தேடி ''மோனை சம்பிரதாயத்துக் கெண்டாலும் கொள்ளி வை'' பெரியப்பா முகம்மூடி அழத்தொடங்கச்சுற்றுப்புறம் உறைந்தது. ஓரடி பின்னால் நகர்ந்து ஒதுங்கிக்கால் ஓயும் வரை இதயம் மூச்சுக்காற்றுக்காக ஹா... ஹா. என்று அலறுகிற வரை உதடுகள் வெடித்து உலர்ந்து போகும்வரை என்னநடந்தது தெரியாது. ஆறுமாதம் ஒரு வருஷம் வெளிச்சத்திற்கு வரமுடியாமல் சாதாரண சமையல்புகைக்குக்கூடப்பேய் மாதிரிப் பயந்து அலறி ஒரு மாதிரிமீண்டுவந்த பிறகுதான் சோகத்தின் கனம்தெரிந்தது.

''அண்ணை! ஒன்றுமே நினைவிலில்லாமல் விசரன் மாதிரி இருக்கேக்கை கவலையில்லை. இப்பத்தான் கனக்குது. ரெண்டு முறை அலரிக்கொட்டை குடிச்சும் சாகேல்லை; தப்பவச்சிட்டாங்கள். அதற்காக ரெண்டு நாள் முழுசாச் சாப்பிடேல்லை தெரியுமே'' சத்தமில்லாமல் குலுங்கி அழுகின்றஅவனைப் பரிவோடு தொட்டுத்தடவிவிட்டான் தனா. இந்த ஆதரவுதான். காயத்தைக் கிளறிக் கிளறியே மருந்திடுகின்றஇந்த இதம் தான்சங்கரை இந்தளவிற்காவது மனிதனாக்கியது.

பின்னர்தான் தெரிந்தது. அரிவாக்கரைக்கும் பன்னிரண்டு ராணுவ உடல்கள் வந்தன. உருச்சிதைவாய் ஒன்று மத்தியூ மாத்தயாவின் மூத்தமகன் ''அத்துலு'' வுடையது. அத்துலுவையும் தெரியும் நல்லவன் எறும்பின் வரிசையைக்கூட மிதிக்காமல் எட்டிக்கடப்பவன். ஏமாற்றப்பட்டுப்படையில் சேர்ந்தவன நல்லவன் தான்; புல்லுருவிகளோடு நல்லமரமும் பட்டுப்போனது வேதனைதான்.

அத்துலுதான் காட்டிக்கொடுத்தான் மிருகங்கள் மாதிரி ஊரை வதைத்தவர்களை பார்த்து ஒரு நாள் கூறிச்சென்றான்.

''வரச்சொல்லுங்கள் அவர்களை; இதில் நான் செத்தாலும் பரவாயில்லை; ஆனால், என்ரை ஆக்கள் ஒருத்தனும் இருக்கக்கூடாது பொறுக்கியள்'' இறைச்சி வாங்க வந்த போது தகவல் மெல்லக்கசிந்தது. நகர்வுகள் சாத்தியங்கள் சாதுரியங்கள் எல்லாம் அதுவேகடைசி சில நாட்களுக்கு முன் என்ரை இனத்தைஅழிக்க நானே உங்களுககுத்திட்டம் போடடுத்தாறன் அதுதான் கவலை. அதுமனச்சாட்சிக்கும் பிழை. ஆனால் நான்இப்பவும் உங்களுக்குஎதிரிதான் என்ரை நாட்டைக்கூறுகேட்கிறதால எங்கடைகாம்ல பருத்தித்திடலும் பாசிக்குளமும் எத்தினை தமிழனைத்தின்று வைச்சிருக்கென்று எனக்குத்தான் தெரியும்; அவனின் சிங்களக்கடிதம் இவ்வாறு தான் நீண்டு சென்றது; அதிலும் பிழையில்லை. தவறாக வழி நடாத்தப்பட்டிருக்கிறான். அவனுக்குத் தெரிந்தவரை அது அவன் நாடு அவ்வளவு தான், அத்துல் உன் கால்களுக்குக் கீழே சில முழங்கள் தோண்டிப்பார் ஒரு தமிழனின் ஒற்றை முது செலும்பாவது. கிடைக்கும் அதுதான் எமது ஆயுதம்

அத்துல் நினைத்த மாதிரி விடுதலை கிடைக்கவில்லை: அந்தநாளின் பொழுதுகளும் புலர்ந்தன; கரைந்தன எரிந்த புகையும் சாம்பலுமாய் அந்தப் பிரதேசம் இரண்டு நாட்களுக்குப்பிறகும் புகைந்தது.

எல்லாம் முடிந்து. ஐந்து வருடங்கள் நகர்ந்தபிறகும் பொருக்கு மூடிய காயம் வெடித்து வலித்தது. நிஜம் தான் பல நிமிடங்கள் அமைதியிலேயே ஊர்ந்து கரைய. சங்கர்தன் நோவைச் சிரமப்பட்டு விழுங்கிக் கொண்டான். மல்லாந்து படுக்கிருந்த தனாவின் விழியோரம் நீர் வடிந்தது; சொட்டுச்சொட்டாக மணலில் உருண்டுஊறி...

சங்கரின் காயங்கள் அகலமானவை, தனாவினது காயங்களிலும் ஆழமிருக்கிறது. ஈரச்சிதறலோடு படபடத்த விழிகளை மூடிக் கொண்டான் தனா; ஈரமும் சொதப்பலுமாய் கரிய செம்மண் நிலம் கண்எட்டும் தூரம்வரை நெடுகப்பரந்திருந்த காணி. அத்தனையும் அண்ணா ஒற்றையாளாய்ச் சம்பாதித்தது. பத்து ஏக்கர்கள். ஊருக்கு ஒதுக்குப் புறமாக ஊரார் காணியில் ஒண்டியிருந்தவர்களை உப்பரிகையில் உலாவரச் செய்தவன் அண்ணா, ஐயா, காலங்காலமாகமரத்தொழில் செய்ய. அந்தப்பத்தும் பத்தாததுமானசொற்ப வருமானத்தில் பொத்தல் உடைகளே போர்வைகளுமாக பழைய சோற்றுக்கே பறந்தடித்த கால வரம்புகள் தான் எத்தனை கடினமானவை.

முதலாளி பரமரின் பனங்காணிக்குள் கொத்தல் குடிசைக்குள் எட்டு ஜீவன்களின் உலகம் அம்மா அங்கொன்றும் இஙகொன்றுமாகப் பொறுக்கிச் சேர்த்து பனம் கொட்டைகளே மாரி காலத்தில் வயிற்றுக்கொதிப்பை. மடக்கிப்பிடித்தன.

இரவு பத்துப் பதினொரு மணிக்குப்பிறகு மன்மதலீலையை வென்றாருண்டோ... ''பாடலோடு செருநாய்கள் புடை சூழ, ஐயா வீதி உலா வருகின்ற காட்சி இருக்கிறதே அது ஒரு தனி அழகு குப்பி லாம்பை வைத்துக்கொண்டு அம்மா மட்டும் குந்திக்கொண்டு உட்கார்ந்திருப்பாள். எத்தனை இல்லாமைகளைப் பொறுத்திருக்கிறான் அண்ணா. கொஞ்சம்விபரம் புரிந்தவன் சிந்திக்கத் தெரிந்தவன். எந்தப்பாதையும் புரியாமல் இருட்டுக்குடிசைக்குள் வெளிச்சப் பொட்டைத்தேடி எத்தனை முறை விடிய விடிய விழித்தபடி கிடந்திருக்கிறான்:

பாடசாலையும்

தானுமென்று
இருந்தவன்தான் பரமு
முதலாளியின் மகன், சுவர்
மூலைக்குள் வைத்து முகத்தில்
அறைந்து காறித்துப்பியதைக்
கண்டும் காணாமல்போன
சைவ மாசுதி பேரம்பலமும்,
பல்லூ... ந்து ரத்தம் வடிய
வந்தவனைச் சரசுசீச்சர்
''உங்களுக்கு உதெல்லாம்
காணாது போயிரடா'' என்ற
போதுந்தான்
பொங்கிப்போனான்;
ஆத்திரத்தைக்
காட்டமுடியாமல்
கைமுட்டியால் சுவரைக்
குத்திக்கையெல்லாம் ரத்த
விளாராக வீட்டுக்கு
வந்தவனைக்கண்டு அம்மா
பதறிப்போனாள்.
''தொடாதேங்கோ...
இதுவரை பார்த்திராத
கோபம், கொந்தளிப்பு,
குமுறல், அடிபட்ட புலி ஒரு
இடத்தில் நிற்கமுடியாமல
ஓடி ஓடி...
அண்ணா ஓடிப்போனான்.
மிஞ்சியிருந்த எங்களை ஐயா
மட்டை நாரால் விளாசிய
விளாசல்...
ஐந்து வருடங்களுக்குப் பிறகு
ஒருநாள் அண்ணா ஊருக்கு
வந்தான். எல்லோரும்
அவனோடு புறப்பட்டது
எல்லாம் நினைக்க நினைக்க
நேற்று நடந்தது போல
நெஞ்சிற்குள் நிழலாடியது.
தங்களுக்கே தங்களுக்கான
புத்தம் புதுப்பூமி. புரட்டிப்
போடப்பட்ட சிசல் காட்டு
மண்ணை, அதன் மணத்தை
நாசி நிறைய நிறைத்துக்
கொள்ளப் புல்லரித்தது.
நிலவை மேகம் மறைத்தது
கன்னங்களில் கோடிட்டுக்
கண்ணீர் வழக்கியது.
அம்மா அவர்களை
உசுப்பினாள்.
குளிருக்கு இதமாகக்
காலிடுக்குகளில் கைகளைச்
சொருகிக்கொண்டு சுருண்டு
படுத்திருந்த சங்கர்.
சோம்பலோடு எழுந்து
உட்கார்ந்தான்.
''மோனை எழும்புங்கோ
நேரங் காலத்தோட ஆரும்
பெருமாப் போனால்
அரை நாளுக்கை வேலை
முடிஞ்சிடும். என்ரை பிள்ளை
மண்ணைத்திண்டுபாடுபடுது.
கால நேரத்தோடை
நடக்கிறதெல்லாம்
நடந்திருந்தால் இண்டைக்கு
அவனுக்கும் நண்டும்
சிண்டுமாய்
நாலுபிறந்திருக்காதே...''
ஏன் இருக்காது? கேள்வியும்
அம்மாவாய் பதிலும்
அவளேயாய் தினம் தினம்
கேட்கிற பாட்டுத்தான்
சங்கர் தனக்குள் சிரித்துக்
கொண்டான்.
அண்ணா கொட்டிலடியில்
மாடுகளை வண்டியில்
பூட்டிக்கொண்டிருந்தார்.
''அம்மா நான் இண்டைக்குக்
கனகர் வீட்டை எரு ஏத்தப்
போறன். நாளைக்குப்
பார்ப்பம்'' ''மோனை
பேந்தெண்டிறதும்
பிறகெண்டிறதும் நடக்காத
காரியம். ஆறு ஏக்கர்
கிண்டின உங்களுக்கு அரை
ஏக்கர் பெரியவேலையே?
பொழுதுசாயத்
தம்பியாக்களையும்
கூட்டிக்கொண்டு போனால்
அரை மணித்தியால வேலை.
இப்ப ஈரங்காய முன்னம்
கிண்டப்போங்கோ''
அண்ணா மறுப்பதும்
அம்மா பிடிவாதமாக ஏதோ
சொல்வதும் தெரிகிறது. சரி
அண்ணா சாக்குகளை
அள்ளிவண்டியில் போட்டுக்
கொண்டார்.
கொஞ்ச நாட்களாகவே
அந்தக்கிராமத்தையும்
ஊடறுத்து ஊடறுத்து
விமானங்கள் போவதும்
வருவதும் வட்டமிடுவதும்...
ஒருமணித்தியாலமுமில்லை
அம்மா ஏன் அப்படிப்
பிடிவாதம் பிடித்தாள். ஒரு
நாளும் எதிர்த்து ஒன்றுமே
சொல்லாத அம்மாவுக்கு
அன்று என்ன வந்தது
அண்ணை கனகர் வீட்டை
போயிருந்தால்
இப்படியெல்லாம்
நடந்திருக்குமே...
இதைத்தான் விதி
என்கிறதோ? அண்ணா
அப்படிப் போறதுக்குத்தான்
அம்மா அந்தளவிற்கு
அவசரப்பட்டாளோ?
வெறும் சதைப்பொதியாக
அண்ணாவின் காரியங்கள்
முடிந்த கையோடு அம்மா
வீட்டைச்சுற்றி மூன்று தரம்
நடந்தா ''மோனை
எழும்புங்கோ என்ரைபிள்ளை
சாப்பிடாமல் போட்டுது.
வேலை தலைக்கு மேலை
கிடக்குது; ஆளும்பெருமாய்ப்
போனியெண்டால்
மதியத்திற்கு முன்னம்
வந்திடலாம்அத்தினை பெரும்
ஓட்டுமொத்தமாய் அதிர
அம்மாமட்டும் சிரிப்போடும்
தலையசைப்போடும்
குசினிக்கும் வீட்டுக்குமாய்
நடந்தாள்ஓ அம்மாவுக்கு...
எதையும் நினைக்க
முடியவில்லை
''ஏன் மோனை
எல்லாரும் கூடியிருக்கிறியள்
தண்ணியிறைச்சுப்
போட்டுக் கொண்ணை
வந்திட்டானே'' ஓடிப்போய்
தெருப்படலையைத்திறந்து
விட்டு எட்டிப்பார்த்தாள்.
அம்மா...அம்மாவாகஇல்லை.
சரியாய் ஒருமாதம்கழித்துஒரு
நாள் ''மோனை
நாஜொருக்கால்
கொண்ணரைப்
பார்த்திட்டு ஓடிவாறன்
நேற்று மத்தியானம்
சாப்பிட்டதுக்கு இரவும்
ஒன்றும் வேண்டாம்
எண்டிட்டான்'' அம்மா
சொன்னது கேட்கிறது. ஏன்
ஒருவராலும் எழுந்திருக்க
முடியவில்லை; அம்மாவை
இழுத்துப்பிடிக்கமுடிய
வில்லை. என்ன சக்தி
அவர்களை அப்படிக்கட்டிப்
போட்டிருந்தது அண்ணா.
சாவதற்கு இரண்டு நாள்
முன்னதாக நடந்த நிகழ்வுகள்
மட்டுமே ஞாபகத்தில்
இருக்கின்றன. அன்றைக்குப்
போன [illegible]

''இண்டைக்குக்
கனகண்ணை வந்தால்
குறிப்பைக் குடுங்கோ.
சுதுமலைப்பகுதியாம்
பொம்பிளை. இந்த வரியம்
கட்டாயம் முடிக்கோணும்
மோனை; கொஞ்சவயதே
முப்பத்திநாலு. ''அம்மா''வின்
குரல் தெருவிலே தேய்கிறது.
ஆனால் எழுந்திருக்க
முடியவில்லை. உடம்பு
முழுக்க ஏதோஒரு கனதி;
நெஞ்சுக்கட்டு அப்படியே
வெறுமையாகிப் போன
உணர்வு...தனா சட்டென்று
உடைந்தான். இரவின்
அமைதி வலையைச்
சிதைத்தவாறு அவனது
கேவல்கள்;
ஒட்டுமொத்தமாகப்
பொத்திப் பொத்திப்
புதைத்து வைத்திருந்த
அத்தனை துயரங்களும்
ஒருசேரப்பொங்கி வர...
அதிர்ந்து போன சங்கர்
அவனை அணைத்துக்
கொண்டான்.
சங்கர் என்ரை அம்மாவைக்
கண்டனான்...

எல்லோரிடமும் ஓடி ஓடி...
அண்ணாவின் பெயரைச்
சொல்லிச்சொல்லி.
ஈர்க்குக்குச்சி மாதிரி...
கீழ் வானத்து விளிம்பில்
ஒற்றை நட்சத்திரப்பொட்டு
அவர்களின் பயணம்
மீண்டும் ஆரம்பம்.
சுமைகளோடு.
கனத்த கவலைகளோடு...
எரிந்து போன ஒற்றைக்
கிராமம். மேற்கு மூலையில்
கிளைகளையெல்லாம்
இழந்து போன இரட்டை
மாமரம், புதிதாக இளம்
பச்சைத் தளிர்கள்
தளிர்ந்திருந்தன.
தெருநெடுகிலும் உச்சிகள்
சிதைந்து போன பனைகள்.
அவற்றின் ஊசிநிழலில் ஓரிரு
மாடுகள் தவிர
ஜீவ நடமாட்டமேயில்லை.
சல்லடையாகிப்போன
சுவர்கள் இன்னமும்உடைசல்
கூரைகளைத் தாங்கியபடி...
சங்கர் தளுதளுத்தான்
இதுதான் அரிவாக்கரை
தனாவின் கைகளை இறுகப்
பிணைத்தபடி அவனுதடுகள்
மெல்ல முனகின.
''அண்ணை வானம்
ஒன்றும் தொலைவிலில்லை;
இதோ கைக்கெட்டும் தூரம்
தான் தினையன் குருவி
சிறகை விரித்தால் நிலவு
மறந்துவிடுமா...
இவர்கள் நினைத்தால்
சூரியப்பாதைத்திசையையே
திருப்பி நடத்துவிப்பார்கள்
சற்று உரக்க வந்து விழுந்த
நம்பிக்கை வார்த்தைகளே
உரமிட கனமானகால்கள்,
சரளைக்கற்பாதையில்
அழுந்தப்பதிகின்றன.
சுவடுகளைப்பதித்தபடி: ■

# திறந்தன சமாதானக்கதவுகள் மட்டுமே



அம்மா!
நீயும் நானும்
நாளை
சந்தித்துக்கொள்ளப் போகின்றோம்.

பிரிவுத்துயரின் முடிச்சவிழ்த்து
காலம்
பரிவு காட்டிப் போகின்றது;

ஆறாண்டுகளின் இடைவெளிகளில்
உருமாறிப்போய்விட்ட
என்னை நீ
எப்படி அடையாளம் காணப்போகின்றாய்?

அங்கொன்றும் இங்கொன்றுமாய்
மேலுதட்டில் கோடிழுத்த
ஐந்தாறு உரோமங்களுடனும்
பால்வடியும் முகத்துடனும் தானே
நீயென்னை
கடைசியாகக் கண்டிருப்பாய்.

எப்படி?
எப்படி நீ அடையாளம் காணப்போகின்றாய்?
கறுத்துப்போன உருவம்
காயங்கள் சுமந்த மேனி
கண்களிலே பிரிவுத்துயரின் அடையாளம்
களை தெரியும் முகம்
நீ எண்ணெய் வைக்காததால்
சுருண்டு போன கேசம்

பார்த்துப் பொருமிக் குமுறாமல்
சகித்துக்கொள்ளும் சக்தி சுமந்து
வருக!
உனது
வருகையை எதிர்பார்த்து காத்திருக்கின்றேன்;

இத்தனை நாள் கடனையும் சேர்த்து
முத்தங்களால் எனை நனை;
உச்சி முகர்ந்து
இறுகக் கட்டி அணை.
உன் அணைப்புக்காய்
தவிக்கிறது என் நெஞ்சு

வருக தாயே! வருக
வந்து
உன் கையால் உணவுசமைத்து
கொஞ்சம் ஊட்டிவிடு;
மரத்துப்போன என் நா
மீண்டும் உயிர்பெறட்டும்;

இதுவரையில்
பார்க்கத் தவித்த உன்மகனை
ஆசை தீரப் பார்.
தலையை மடியில் போட்டு
தாலாட்டு
தலைமயிர்களை உன்கைகளால் அளை
முகத்தை மெதுவாக வருடு.
வீரத் தழும்புகளை
இதமாக ஒருமுறை தடவிவிடு.

அம்மா!
உன்னை ஒன்று கேட்கின்றேன்,
கேட்காதே
''நாட்டுக்கு உழைத்தது போதும்
வீட்டுக்கு வாவென''
இப்போதும் கூட நீ கேட்காதே;

திறந்தது
சமாதானக் கதவுகள் மட்டுமே
இன்னும்
திறக்கப்பட வேண்டிய
இறுகிப்போன பல சாளரங்கள் உண்டு.

■

○ யாழ். வீரன்

உருவகம்

# அழியா இனம்

அந்தப் பனையில் காய்ந்த ஓலைகள் தொங்கிக் கொண்டிருந்தன.

விர்ர்... என காற்றுக்கு இசை எழுப்பின காவோலைகள். கேட்பதற்கு மிக இனிமை அந்த ஒலி;

''ம்..ம்... என்னை உள்வாங்கித்தானே உன்னால் இப்படி ராகம் பாட முடிகிறது. உன் ஒலியைக் கேட்கும் போதெல்லாம் உன்மீது எனக்கு எரிச்சலும், பொறாமையும் பொத்துக் கொண்டு வருகிறது.

ஆதலால் என் பலத்தின் மூலம் உன்னில் தூங்கிக் கொண்டிருக்கும் காவோலைகளை வீழ்த்தி விடப்போகின்றேன்'' என்றது காற்று.

''முட்டாள் காற்றே! இப்போது கூட உன்னால் காவோலைகளை வீழ்த்த முடியும் என்பது உண்மைதான். ஆனால நீ விழுத்த விழுத்த நான் புதிய காவோலைகளை உருவாக்கி ஒலி எழுப்பிக்கொண்டேஇருப்பேன்...

''உனக்கு வாய்க்கொழுப்பும் திமிரும் அதிகமாகத்தான் இருக்கிறது'' இது காற்று.

''இல்லை. நீ சொல்வது தவறு! எனக்கு கொழுப்பும் இல்லை! திமிரும் இல்லை. உன்னைஇழப்பதனால் இன்னொன்று கிடைக்கிறது இதுவேதான் தனி மனிதனுக்கும், உலகத்திற்குமான நியதி! இது போலத்தான் எனது வாழ்வும்!'' என்று அமைதியாகக் கூறியது பனை.

''ங்ம். கதைக்குக் கதையா கதைக்கிறாய் நீ... இதோ பார். நான் புயல்க் காற்றாக மாறி உன்னை வேரோடு சரித்து விடுகிறேன்''

முட்டாள்...! படுமுட்டாள்; நீ!! நீ புயலாக மாறி என்னை அடியோடு வீழ்த்தலாம் என்பது உண்மையிலும் உண்மை!

என்னை நன்றாகக் கவனித்தாயா?

என் அடியைப்பார்த்தாயா? காற்றே..

என் விதைகள் வீழ்ந்து அடியைச் சுற்றிவர வடலிகள் முளைத்து நிற்கின்றனவே.. அவைகளை உன்னால் என்ன செய்யமுடியும்?

தான் விழுந்தாலும் நிமிர்ந்து வாழப் போகின்ற வடலிகளை, வாஞ்சையோடு பார்த்துப் புன்னகைத்தது பனை.

பனைகளை நான் வீழ்த்தினாலும், வடலி முளைகளை என்ன செய்யலாம்? கடுமையாக யோசித்தது காற்று. ●

● ஆவரங்கால் சுதன்




# புன்னகை புரிவீர் புத்துணர்ச்சி அடைவீர்...!

அதில் போலித்தனம் இல்லாத போது சந்தேகம் எனும் மாய மான் ஓடிவிடும். பல வருஷங்களாக அடிமனதில் மண்டிக்கிடக்கும் தப்பெண்ணம் தவிடு பொடியாகிவிடும். சந்தேகத்தாலும் அவநம்பிக்கையாலும் அடைபட்ட உள்ளக் கதவுகள் உடைந்து போகும். மன நிம்மதியையும் மன மகிழ்ச்சியையும் மழை போலப் பொழியும் ''உங்களை நான் புரிந்து கொண்டேன், கவலைப்படாதீர்கள்'' என்று தட்டிக் கொடுக்கும். ''நாம் நல்ல நண்பர்களாக இருக்கலாம்'' என்று சொல்லி மனதைக் குளிர வைக்கும், சக்தி வாய்ந்த அந்த ஆயுதம் தான் என்ன? அதுவே புன்னகை! உங்கள் புன்னகை!

புன்னகை என்பது என்ன? ''வேடிக்கை, சம்மதம் அல்லது சந்தோஷத்தைக் காட்ட, இதழ் இலேசாக விரிய மென்மையாகச் சிரித்தல்'' என்று பொதுவாக அகராதிகள் விளக்கமளிக்கின்றன. புன்னகை ஒருவரின் உணர்வுகளை மற்றவர்களுக்கு மௌனமாக வெளிப்படுத்துகிறது. புன்னகையால் இகழ்ச்சியை வெளிப்படுத்தலாம் அல்லது அலட்சியத்தையும் வெளிப்படுத்தலாம்.

புன்னகைக்கு இவ்வளவு சக்தியா? யாரோ ஒருவர் உங்களைப் பார்த்து புன்னகைத்தால் நிம்மதியடைந்தது அல்லது சந்தோஷப்பட்டது ஞாபகமிருக்கிறதா? அல்லது ஒருவர் புன்னகைத்த போது பயந்து போனது அல்லது மனம் நொந்து போனது ஞாபகமிருக்கிறதா? ஆம், புன்னகைக்கு சக்தி உண்டு. அது புன்னகை புரிபவரையும் அவர் யாரைப் பார்த்து புன்னகைக்கிறாரோ அவரையும் சந்தோஷப்படுத்துகிறது.

புன்னகை இன்றுவரையாகவும் நன்மைகளை அள்ளி வழங்குகிறது. இதமாக இதழ் விரிந்தால் மனதில் மண்டிக் கிடக்கும் பதற்றம் பறந்து விடலாம். மனதில் இறுக்கம் அல்லது ஏமாற்றம் இருந்தால் புன்னகை அந்த இறுக்கத்தை நீக்கி விடுகிறது. சோர்வும் நீங்கிவிடுகிறது. உதாரணத்திற்கு ஒரு பெண்ணை எடுத்துக்கொள்ளுங்கள். மற்றவர்கள் அடிக்கடி அவளைப்பார்ப்பதை அவள் கவனித்தாள். ஆனால் இவள் பார்க்கும் போது அவர்கள் உடனடியாக வேறு பக்கமாக முகத்தைத் திருப்பிக் கொள்வார்கள். அவளுக்கு இது மிகவும் வேதனையாக இருந்தது. ஒரு நாள் இவளுடைய சிநேகிதி இவளுக்கு ஒரு ஆலோசனை வழங்கினாள். அவர்கள் உன்னைப் பார்த்தால் உடனடியாக அவர்களைப் பார்த்து புன்னகைத்து விடு என்றாள். இரண்டு வாரங்கள் முயற்சி செய்து அவள் இதையே செய்தாள், என்ன ஆச்சரியம் பாருங்கள்! அனைவரும் அவளைப் பார்த்து திரும்ப புன்னகை செய்தார்கள். பதற்றங்கள் பதருகளாகப் பறந்து விட்டன! ''வாழ்க்கை உண்மையில் ஆனந்தமானது'' என்றாள் அவள். ஆம்.

புன்னகை மலரை மற்றவர்கள் மீது அள்ளி வீசுங்கள். அது சிநேக தென்றலாக வந்து தழுவும்

## அனைவருக்கும் நல்லது

புன்னகைக்கும் நமது உணர்ச்சிகளுக்கும் தொடர்பு உண்டு; நமக்கு நல்ல மனநிலை கிடைக்க புன்னகை உதவும். உடல் ஆரோக்கியத்திற்கும் அது நல்லது ''வாய் விட்டுச்சிரித்தால் நோய் விட்டுப் போகும்'' என்பது பழமொழி, ஒருவரின் உடலுக்கும் உள்ளத்திற்கும் அதிகம் தொடர்பிருப்பதாக மருத்துவ அதிகாரிகள் கூறுகின்றனர். எப்போதும் மனப் பாரத்தோடு, எதிலும் நம்பிக்கையில்லாமல் இருந்தால். நம்முடைய உடலில் உள்ளநோய் எதிர்ப்பு சக்தி குறையும் என்பதை அநேக மருத்துவ ஆராய்ச்சிகள் ஆமோதிக்கின்றன. ஆனால், முகத்தில் புன்னகை வீசினால மனசுக்குள் மகிழ்ச்சி கீதமாக இசைக்கும். எப்போதும் கல கல வென்று சிரித்துக் கொண்டு வலம் வந்தால் நோய் நம் பக்கத்தில் வர அஞ்சும்.

புன்னகை மற்றவர்களை வசீகரிக்கிறது. உங்களுக்கு ஆலோசனை அல்லது புத்திமதி அளிக்கப்படும் ஒரு சந்தர்ப்பத்தை கற்பனை செய்து கொள்ளுங்கள். ஆலோசனை சொல்பவரின் முகபாவனை எப்படி இருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புவீர்கள்? அவருடைய முகம் கடுகடுவென்று இருந்தால் அது அவருடைய கோபத்தையும் எரிச்சலையும் வெறுப்பையும் கூட வெளிப்படுத்தும். மறுபட்சத்தில் ஆலோசனை சொல்பவர் முகத்தில் இதமான புன்னகை தவழ்ந்தால் நீங்கள் சௌகரியமாக உணர்ந்து. அவர் சொல்லும் அறிவுரையை தாராளமாக ஏற்றுக் கொள்வீர்கள் அல்லவா? மன இறுக்கமான சூழலில் ஒருவருக்கொருவர் தவறாக புரிந்து கொள்வது சகஜம். ஆனால் அந்த நேரத்தில் கூட புன்னகை வீசினால் மனஸ்தாபங்கள் மறையலாம்,

## புன்னகை நல்லெண்ணங்களின் பூக்கள்

புன்னகை செய் என்று சொன்னதும் பளீரென்று புன்னகை வீச நாம் ஒன்றும் திறமையான நடிகர்கள் அல்ல. அதுபோல் புன்னகைக்க நாம் விரும்புவதும் இல்லை. நம்முடைய புன்னகை போலியாக இல்லாமல், இயல்பாக இருக்க வேண்டும். செய்தித் தொடர்பு பள்ளி ஆசிரியர் ஒருவர் இவ்வாறு கூறினார்; ''முதலில் உங்கள் மனதை இலேசாக்கிக் கொள்ளுங்கள். பிறகு மனசார புன்னகை செய்யுங்கள். இல்லாவிட்டால் அது மிகவும் செயற்கையாக இருக்கும்.

மௌனமாக நம்முடைய உணர்வுகளை வெளிக் காட்டுவதே புன்னகை என்பதை மறந்து விடாதீர்கள். ''இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்'' என்பதையும் ''நல்லவைகள்'' ''நல்ல பொக்கிஷத்திலிருந்து'' வரும் என்பதையும் நாம் அறிவோம், அப்படி யென்றால் மனதிலும் இதயத்திலும் போலித்தனம் இல்லாத போது கள்ளமில்லா புன்னகைக்கு பஞ்சமிருக்காது. நம் இருதயத்திலிருப்பது நம் சொல்லிலும் செயலிலும் மட்டுமல்ல, நம் முகபாவனையிலும் பளிச்சென்று தெரிய வந்துவிடும். ஆகவே நல்ல எண்ணங்களை வளர்த்துக் கொள்வதற்கு நாம் எப்போதும் உழைக்க வேண்டும். மற்றவர்களைப் பற்றி நாம் என்ன யோசிக்கிறோமோ அது பளிச்சென்று நம் முகத்தில் தெரிந்து விடும். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்று சும்மாவா சொன்னார்கள்? நண்பர்கள் ஆகியவர்களின் நல்ல குணங்களையே நாம் சிந்திப்போமாக, அப்போது அவர்களைப்பார்த்து மனசார புன்னகைப்பது நமக்கு சுலபம். அது நற்குணம், இரக்கம், தயவு, ஆகிய நல்ல எண்ணங்கள் நிரம்பி வழியும். இதயத்திலிருந்து மலர்ந்த புன்னகையாக இருக்கும்.

அந்த மலர்ச்சி கண்களிலும் தெரியும். பார்ப்போரின் முகமும் மலரும். ஆனால் வளர்ந்த விதத்தால் அல்லது சூழ்நிலையால் சிலருக்கு புன்னகைப்பது கடினம்; நல்லெண்ணம் படைத்தவர்களாக அவர்கள் இருந்தாலும், புன்னகைப்பது அவர்களுக்குப் பழக்கமில்லாமல் இருக்கலாம்.

உதாரணமாக, ஜப்பானிய ஆண்கள் எல்லா சந்தர்ப்பங்களிலும் அடக்கமாக, அமைதியாக இருப்பதே வழக்கம். ஆகவே முன்பின் தெரியாதவர்களைப் பார்த்து புன்னகை செய்யும் பழக்கம் அவர்களில் அநேகருக்கு இல்லை. மற்ற தேசங்களைச் சேர்ந்தவர்களும்கூட இப்படி இருக்கலாம். கூச்ச சுபாவத்தால் புன்னகைக்க சிரமப்படுவோரும் உண்டு. ஆகவே ஒருவர் எந்தளவு புன்னகைக்கிறார் அல்லது எவ்வளவு அடிக்கடி புன்னகைக்கிறார் என்பதை வைத்து அவரை எடைபோடக் கூடாது. ஒவ்வொருவரும் வித்தியாசமானவர்கள்; அவர்களுடைய குணங்களும் வெவ்வேறு. அவர்கள் மற்றவர்களோடு பேசும் முறைகளும் வெவ்வேறு. புன்னகைப்பது உங்களுக்கு கஷ்டமாக இருந்தால், ஏன் சற்று முயற்சி எடுக்கக் கூடாது?

மற்றவர்களைப் பார்த்து புன்னகைப்பதும் 'நன்மை செய்யும்' வழியாகும். இது உங்களால் முடிந்ததே! ஆகவே புன்னகையோடு மற்றவர்களுக்கு வாழ்த்துச் சொல்லவும், உற்சாகமாக பேசவும் முந்திக்கொள்ளுங்கள். உங்களது புன்னகை அவர்களை கட்டிப்போடும்: புன்னகை செய்யச் செய்ய அது உங்கள் உதட்டோரங்களில் நிரந்தரமாகக் குடிகொள்ளும்;

நன்றி- 'விழித்தெழு'



# சங்கப்படலை

## கண்ணீர் நெருப்பென்றுகாண்.

கொன்ற பழியென்றும்
கொல்லாமல் விட்டதில்லை
என்றசொல் என்றும் எரியாது
அன்றெமக்கு
செய்தபழி அவரைச்
சிறைவாழச் செய்தது பார்
வெய்யோரைச் சூழும் விதி.

செய்த பழியும்
செய்கின்ற பழியதுவும்
உய்யவிடா தென்று உணர்ந்திடுக
எய்தெமக்குப்
புண்செய்த ''ஜெனரல்''
பிடிபட்டார்; நாமழுத
கண்ணீர் நெருப்பென்று காண்.

பூவின் முளைகிள்ளி
புற்துளிரின் உயிர்கிள்ளி
சாவின் மடிதள்ளச் சம்மதித்து
ஏவியவர்
இன்று சிறைக் கூண்டில்
இருக்கின்றார்; மருமகளும்
சென்றிடுவார் நாளை சிறை.

அப்பன் வாய்விண்ணன்
ஆத்தாள் நாயுண்ணி
உப்பிப் பெருத்தவனோ உடன்பிறப்பு
இப்பொழுது
மாமன் சிறைவீட்டில்
மகளோ குளிர்நாட்டில்
ஊமை வலியவர்க்கு உணர்.

சதிவேலைக் கொடுமுடியே!
சந்திரிக்கா எடுபிடியே!
மதியுரைத்த வெற்று மந்திரியே!
கதிர்காமா!
வாலாட்டும் வீட்டின்
வளர்ப்பே; வாசலின்றிக்
காலாட்டி விசராவாய் காண்.

பட்டவினை காலில்
படுமென்பர்; உன்வினையோ
முட்டிக் கிடக்குதுபார் முழுவுடலும்
டக்கிளசு
வெந்த சோறெறிந்து
வெறுமரிசி தின்றவனே
உந்தனையும் சுற்றுதடா ஊழ்.



கோணாமலைத் தேசிகர்

## இன்றைய அரசியல் நோக்கு

# நீதியான சமாதானமும் சிங்கள ராஜதந்திரமும்

**மு. திருநாவுக்கரசு**

அரசியலில் இது ஒரு புதிய யுகம். சர்வதேச அரசியல் இன்று முற்றிலும் புதுவடிவம் பெற்றுவிட்டது. மனிதன் இன்று பூகோளப் பிராணியாகிவிட்ட நிலையில் சர்வதேச அரசியலே உள்நாட்டரசியலைப் பெரிதும் தீர்ணயிக்கும் காலமிது. பழைய கண்கொண்டும், மரபுவழி அணுகுமுறைக் கூடாயும் அரசியலைச் சிறிதும் விளங்கமுடியாத, விளங்கக்கூடாத காலமிது.

தற்போது ஆப்கானிஸ்தானில் மையங்கொண்டுள்ள ''பச்சை எதிர்ப்பு'' யுத்தத்தில் - நவ சிலுவை யுத்தத்தில் - அமெரிக்காவுடன் ரஷ்யா, சீனா, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் ஓரணியில் நிற்கும் வினோத யுகமிது. பாரம்பரிய அரசியல் அணுகுமுறைப்படி இது கற்பனைக்கு எட்டமுடியாத கூட்டு.

சர்வதேச அரசியல் நிலைமையானது உள்நாட்டு அரசியலை புதிய கண்கொண்டு அணுகுமாறு ஆணையிடுகின்றபோதிலும் அதனைக் கையாள்வோர் பழைய கண்கொண்டோராய் இருக்குமிடத்து நிலைமை இடர்படக் கூடியதாயும், எதிர்மறை விளைவிற்குரியதாயும் அமைய முடியும்.

இலங்கையின் இனப்பிரச்சினையில் பாரம்பரிய அணுகுமுறைகளைக் கைவிட்டு புதிய போக்கினை மேற்கொள்ள வேண்டுமென்று சிங்கள அரசியல் வாதிகளை அண்மையில் றணில் கோரியுள்ளார்;

சிங்கள மரபுவழி இனவாத அரசியலுடன் ஒப்பிடுகையில் பதவிக்கு வந்ததிலிருந்து இதுவரை றணிலால் மேற்கொள்ளப்பட்டுள்ள அரசியல் நடவடிக்கைகள் துணிகரமானவை. ஓராண்டிற்கு முன்னர் ''தீர்வுத்திட்ட'' நகல்களை எரித்த, எதிர்த்த றணில் இப்போது திடீரென புனிதராகிவிட்டாரா என்ற கேள்வி எழுவது இயல்பே. ஆயினும் சர்வதேச, உள்நாட்டு நிலைமைகளும் நிர்ப்பந்தங்களும், போராட்டப் பலமும் அவரைத் ''தீர்வு'' நோக்கிய நகர்விற்கு நிர்ப்பந்தித்துள்ளன;

எப்போதும் சிங்கள ஆட்சியாளர் சர்வதேச நிலைமைகளைக் கையாள்வதில் கைதேர்ந்தவர்கள். இலங்கைத்தீவின் அமைவிடச் சூழல் காலம் காலமாய் அவர்களுக்கு இவ்விசேட திறனைக் கொடுத்துள்ளது. பிரமாண்டமான இந்தியாவிற்கு அருகே அதன் அடிப்பகுதியில் முக்கிய மையத்தில் அமைந்திருக்கும் ஒரு தீவு என்றவகையில் தமது இருப்பின் பொருட்டு சிங்கள ஆட்சியாளர் அதிகம் நரித்தனமான இராஜதந்திரத்தை வளர்த்தெடுப்போராகினர்.

''பெரிய இந்தியாவிற்கு அருகாமையில் அமைந்துள்ள இச்சிறிய இலங்கைத்தீவை இந்தியாவின் நேரடிப் பிடிக்குள் பெரிதும் அகப்படாமல் 2500 ஆண்டுகளாகப் பாதுகாக்க முடிந்துள்ளமையானது சிங்கள ஆட்சியாளரின் ஒரு தனிவிசேட இராஜதந்திரத் திறமைதான்'' என்று கூறப்படும் கூற்றானது மிகவும் கவனிக்கத்தக்கதொன்றே.

பாரம்பரியமான இனவாத அரசியல் அணுகுமுறையிலிருந்து மாறவேண்டிய நிர்ப்பந்தம் வரலாற்று வளர்ச்சியால் ஏற்பட்டுள்ளபோதிலும் அவர்களால் மேற்படி நீண்டகாலமாய் வளர்த்தெடுக்கப்பட்டுள்ள இராஜதந்திரத் திறனை தமது நலன்களின் பொருட்டு அவர்கள் பயன்படுத்துவதும் இயல்பே. ஆதலால் மரபுவழி இனவாத அணுகுமுறையிலிருந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்ற புதிய அணுகுமுறைக்கு வந்துள்ள தான மாற்றத்தினையும் அவர்கள் பிரயோகிக்கக்கூடிய அவர்களின் இராஜதந்திரத் திறனையும் நாம் ஒன்றோடொன்று குழப்பவேண்டியதில்லை. எல்லாப் புதிய சூழல்களிலும் அவர்கள் தமது கைதேர்ந்த திறன்களைப் பிரயோகிப்பர்.

டி. எஸ். சேனநாயக்காவின் 52 ஆவது நினைவுதினத்தை முன்னிட்டு வரலாற்றுப் பேராசிரியர் கே. எம். டி. சில்வாவும் டி. எஸ், காலத்திலிருந்து இராஜதந்திர சேவையில் ஈடுபட்டுவந்த. டி. எஸ். சுடன் பழகிவந்த பேணாட் திலகரத்தினாவும் தொலைக்காட்சி உரையாடலில் டி. எஸ். சேனநாயக்காவைப் பற்றிக் கூறிய கருத்துக்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. இருவரும் அவரது இராஜதந்திரத் திறன் பற்றிய ஒரே கருத்தையே சுருக்கியும் விரித்தும் கூறினர்

கே. எம். டி. சில்வா கூறினார். இந்தியத்தேசிய வாதிகளினாலும் தலைவர்களினாலும் இந்தியாவிலிருந்து பர்மாவும், பாகிஸ்தானும் உடைந்து போவதைத்தடுத்துப் பாதுகாக்க முடியவில்லை. ஆனால் டி. எஸ். சேனநாயக்காவினால் இலங்கையைஉடைந்துபோககாமலும், இரத்தம் சிந்தாமலும் பிரிட்டிஷ்காரரிடமிருந்து சுதந்திர நாடாக்கமுடிந்தது.

பேணாட் திலகரத்தினா இதனை மேலும் விரித்துக் கூறுகையில் தென்னாசியாவில் மட்டுமன்றி தென்கிழக்காசியப் பிராந்தியத்திலும் காணப்பட்ட நிலைமைகளுடன் ஒப்பிடுகையில் டி. எஸ். சேனநாயக்காவின் தலைமைத்துவமும் இராஜதந்திரமும் தனித்துவம மிக்கவை. இந்தியாவிலிருந்து முதலில் பர்மாவும், பின்பு பெரும் இரத்தக்களரியுடன் பாகிஸ்தானும் பிரிந்து போயின. மலேசியாவிலிருந்து சிங்கப்பூரும் பிரிந்துபோன சுதந்திரங்களையே அடைந்தன. ஆனால் இலங்கையில் இரத்தம் சிந்தாது, இலங்கையைத் துண்டுபட்டுப் பிரியவிடாது பிரிட்டிஷாரிடமிருந்து டி. எஸ். பேச்சுவார்த்தைகளின் மூலம் மீட்டெடுத்தார். இது தெற்கு, தென்கிழக்கு ஆசியப் பிராந்தியம் முழுவதுமே தனித்துவமானதும் தனிஇராஜதந்திர மெருகுடையதுமேயாகும். ஆனால் பிரிவினைக்கு அப்பாலும் மலேசியாவின் பெருமளவினதான உள்நாட்டு இரத்தக் களரியினைத் தடுக்க மலேசியத் தேசியவாதிகளினால் முடிந்திருக்கவில்லை. இந்தவகையில் டி. எஸ். ஒரு தனித்தினிசு என்றார்.

இவற்றுடன் மேலுமொரு கட்டத்தை நோக்கலாம். 1980களில் இந்தியா ஜே. ஆரின் ஆட்சிக்கு முற்றிலும் எதிர் நிலை எடுத்தது. தனது இராணுவ பலத்தைக் காட்டி 1987 வரை பலமாகஅச்சுறுத்தியது. எந்தத் தமிழரின் பெயரால் இந்தியா ஜே. ஆரையும் சிங்கள ஆட்சியையும் அச்சுறுத்தியதோ அந்தத் தமிழரையும் இந்தியாவையுமே இறுதியில் மோதவிட்ட திறன், மோதவிட்டுக் கூத்துப்பார்த்த திறன், தமிழரையும் இந்தியாவையும் நீண்ட பகைவர்களாக்கிய நரித்தனமான இராஜதந்திரத் திறன் ஜே. ஆரிடம், சிங்கள ஆட்சியாளரிடம் தெளிவாகப் புலப்பட்டது. வீரம் பேசிய இந்தியாவை இலங்கை மண்ணில் மாறாத காயத்தைப் பெறவைக்க சிங்கள இராஜதந்திரத்தால் முடிந்தது. இவ்வாறு காயப்படத்தக்க சூழலில், சேற்றில் இந்தியாவைச் சிக்கவைக்க சிங்கள இராஜதந்திரத்தால் முடிந்ததென்பது ஒரு விபத்தல்ல.

துன்பப்பட்ட, துன்பப்படும் மக்களின் விருப்பமாய் ''சமாதானம்'' உள்ளது. ஆதலால் அதனை நோக்கிக் கையுயர்த்துதல், அதன்பால் முன்னேற முயலுதல் தவிர்க்க முடியாது: அதேவேளை சமாதானம் பற்றிய உடனடிப் புளகாங்கிதங்களுக்கப்பால் எதிரியின் இராஜதந்திரத் திறன்பற்றிய மதிப்பீடு இழப்புக்களைக் குறைப்பதற்கான முன் நிபந்தனையாகும்.

துன்பப்படும் தமிழ்மக்கள் சமாதானத்தை விரும்புகின்றனர்: அவர்களின் துன்பம் அவ்வளவு கொடியது. சிறிய மக்கள் தொகை, சிறிய பிரதேசம், அத்துடன் சிறிது சிறிதாகத் துண்டாடப்படத்தக்க புவியியல் நிலப்பரப்பு. இவற்றுடன் மூன்று தசாப்தங்கள் நீடித்துவிட்ட போராட்டம் என்பவற்றின் பின்னணியில் மக்களின் துயரம் அளப்பெரியது.

1977 முதல் தொடர்ச்சியான இனப்படுகொலைகளுக்கும், இராணுவப் படுகொலைகளுக்கும் மக்கள் பெரிதும் பலியாகியுள்ளனர். மக்களதும், போராளிகளினதும், கரும்புலிகளினதும்தியாகம் பெரிது. அத்துடன்பல்லாயிரக்கணக்கான போராளிகளையும் பலநூற்றுக்கணக்கானசரும்புலிகளையும் ஈந்து அத்துயரத்தைத தாஙகும் பெற்றோரதும், காதலரதும், உடன் பிறப்பினரதும் இதயங்களின் வலிமை பெரிது. மேலும் பொதுவாக உயிர்களை இழந்து, உடமைகளை இழந்து இளமையை இழந்து, வாழ்வின் சுகங்களையும், நலன்களையும் இழந்து தவிக்கும் மக்களின் துயரம் பெரிது.

தமது இப்பெரும் துயரங்களின் பின்னணியில மக்கள் சமாதானத்திற்கான ஒரு வாய்ப்புக் கிடைக்குமாயின் அதனைப் பற்றிக்கொள்ள விரும்புகிறார்கள். இந்தப் பின்னணியிற்தான் நல்லூர் ஆலய முன்றலில் முருகனுக்குப் பதிலாக றணிலை ஒரு மூதாட்டி உணர்ச்சி பொங்கக் கரம் கூப்பி ''ஆம்பவன்'' என்று கூறிக் கும்பிட்டமை புரிந்துகொள்ளத்தக்கது.

மக்கள் இப்போது நிம்மதியை விரும்புகிறார்கள், மூச்சுவிட விரும்புகிறார்கள், சுதந்திரமாக எங்கும் நடமாடவிரும்புகிறார்கள். இப்பிராந்தியத்தில் ஈழத்தமிழர் தனிவிசேட வரலாற்றியல்புகளைக் கொண்டவர்கள். அதிகம் உழைப்பார்வம் மிக்கவர்கள், அதிகம் எழுத்தறிவுள்ளவர்கள் களையப்படவேண்டிய உழுத்துப்போன பகுதிகள் எம்மத்தியில் இன்றும் உள்ளபோதிலும், தமிழ் தேசிய நிர்மாணிப்பில் வளரவேண்டிய இடமும் ஈட்டவேண்டிய இலக்குகளும் இன்னும் இருப்பினும் முழு இலங்கைக்கும் முதலில் சுதந்திரம் கோரிய மண்ணெமது. பல்வேறுபோராட்டங்களுக்கும் அழைப்புக் கிடைத்த போதெல்லாம் மக்கள் முன்வரிசைக்கு வரும் மண்ணிது.

நேரடியாகவும், மறைமுகமாகவும் பல்வேறு வெளிநாட்டு இராணுவங்களினதும், இராணுவ நிபுணத்துவங்களதும் ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாகி இரத்தமும் தசையுமாய் யதார்த்தத்தைப் புரிந்துகொண்ட மக்கள் வாழும் மண்ணிது. நீண்ட பல்வேறு ஒடுக்குமுறைகளினதும் துயரங்களினதும பின்னணியில் நேரடிக் குருவின்றியே அரசியல் வித்தை பயிலும் மக்கள் வாழும்மண்ணிது. இந்த அனுபவம் மிக்க மக்களை எவராலும் ஏமாற்ற முடியாது

நல்லூர் ஆலய முன்றலில் அப்பாவித்தனமாகச் 'சந்திரிகா சுளகு' விற்கவும் சிலர் இருந்தனர். அதே அப்பாவித்தனத்துடன் நல்லூரில் றணிலைக் கும்பிடவும் சிலர் இருந்தனர். திட்டமிட்டுப் பின்தொழுது செல்லவும் சிலர் இருப்பதுண்டு. இவை அனைத்திற்கும் அப்பால் நல்லூர் முன்றலில் தண்ணீர் அருந்தாது தியாகித்த திலீபனின் தாகம் வலியது - தமிழ் மக்களின் விறைப்பேறி நிமிர்ந்துள்ள வரலாறு வலியது. அவர்கள் கோரும் சுதந்திரம் வலியது: பேச்சுரிமை வலியது. எழுத்துரிமை வலியது. வாழ்வுரிமை வலியது. மக்கள் தமது அனைத்து உரிமைகளும்மதிக்கப்படுவதிலிருந்தும் ஏற்கப்படுவதிலிருந்தும் சமாதானத்தை நோக்குகிறார்கள்.



■ பிரதமர் றணில்நாட்டுமக்களின்ஒருபகுதியினருக்குச் சார்பாக நடந்து கொள்கிறார். சந்திரிகா, இந்தியப் பிரதமருக்கு கடிதம். -செய்தி

சிறிலங்காவின்ரை பிரச்சினைகளைத் தீர்க்கவோ, முறையிடவோ இந்தியாதான் நீதிமன்றமோ? இல்லாட்டி ஏனப்பா நாட்டின்ரை தலைவி தனக்கு கீழ் உள்ளவர் பற்றி அங்கை முறையிடவேணும். கையாலாகத் தனமோ...

■ முன்னாள் அமைச்சர் மங்களசமரவீர நீதிமன்றம வரவில்லை. -செய்தி

நீதியை நிலைநாட்டவேண்டியவர்களே நீதிக்கு தலைவணங்கப் பின்னடித்தால் பிறகு அந்த நாட்டிலை என்னெண்டு நீதிகிடைக்கும்? அட இது சிறிலங்காவிலைதானே நடந்திருக்குது. அங்கை நீதி எப்பவோ செத்துப்போச்சுது எல்லே... மறந்திட்டன்-

■ ஆளும் கட்சியிலையிருந்து சிலர் எதிர்க்கட்சிப்பக்கம் வரப்போகினம் சுதந்திரக்கட்சி செயலாளர் தெரிவிப்பு -செய்தி

கட்சி மாறுகிறதும் அளித்தவாக்குறுதிகளை காற்றிலை பறக்கவிடுகிறதும் அரசியல் வாதிகளுக்கு கைவந்தகலைதானே. இவை அடுத்தவீட்டுக்காரனை இழுக்கப்போய் தங்கட வீட்டிலை இருக்கிறவனை இழக்காமல் இருந்தால் சரிதான்.

■ ஜெனரல் ரத்வத்தைக்கு திடீர் சுகவீனம் மீண்டும் வைத்தியசாலையில் அனுமதி. -செய்தி

அட என்னமாதிரி நெஞ்சை நிமிந்தி படைநிலைகளுக்கு எல்லாம் வந்துபோன மனுசனுக்கு இப்பஎன்னடா எண்டால் திடீர் திடீரென்று வருத்தம் வருகுதாம். அதுகும் நீதிமன்றவிசாரணை முடிஞ்சு சிறைச்சாலைக்குள்ள கொண்டு போன கையோட திருப்ப வருத்தம் வருகிதாம். இதுபொல்லாதவருத்தம் போலகிடக்கு நல்ல இடத்திலை மருந்து எடுத்தால்தான் மாறும் பாருங்கோ.

**மதவடி மயிலர்**

## என்றும் தொடரட்டும் சமாதானம்

போர் ஓய்ந்ததென்ற
புதுக்கனவுடனே
புதியபாதை திறந்துள்ளது.

வேரோடிய எம்முறவுகள்
ஆனந்த
விழிநீர் துடைத்தே
எம்மருகில் வந்துள்ளன.

ஒருறவாய்; ஒருயிராய் வாழ்ந்த வாழ்வு
இன்னும்
உருக்குலைந்துபோகவில்லை.

பேரிடிகள் இடித்தென்ன?
பெரியமழை கொட்டியென்ன?
நகமும் தசையும் போல
நாம் வாழ்ந்த இனியவாழ்வு
என்றும்
கூறாகாது;
எவர்க்கும் 'கும்பிடு' போடாது.

பெரும் பேறாகக் கிடைத்த
இந்தவொரு 'சமாதானம்'
என்றும் தொடரட்டும் இம்மண்ணில்
சந்ததி சந்ததியாக...

புதுவருடம் பிறக்கையிலே
நாட்டிலுள்ள
மூவின மக்கள் முகங்களிலும்; வாழ்விலும்
புதியவொளிபரவட்டும்!
புது இன்பம் பெருகட்டும்!

துவிச்சக்கரவண்டி,
துவிச்சக்கரவண்டி
உதிரிப்பாகங்கள்
பெப்சி, மெரண்டா,
ரி.வி., றேடியோ
விநியோகஸ்தர்கள்

# இ. ச. பேரம்பலம் சக நிறுவனம்

**50, 52, 54, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்**

**எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள், விநியோகஸ்தர்கள்
அனைவருக்கும் எமது சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை
தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகின்றோம்.**

தொலைபேசி: 021-2988
தொலைநகல்: 021-2368

## சென்றவாரத் தொடர்ச்சி

நடிகர்களது அசைவுகளை ஜூம் லென்ஸ் (Zoom Lense) வாயிலாக தொடர்வது அனேகருக்கு வழக்கம். சரியான முறை என்னவோ நடிகனது நகர்வினை அவனுக்கு இணையான கமரா வேகத்துடன் நகர்ந்து படம்பிடிப்பது தான். நடிகன் நகரும் பொழுது கமரா நகர வேண்டும். அவன் நிற்கும்பொழுது கமராவும் அசைவதை நிறுத்திவிட வேண்டும். இந்த முறையைப் பின்பற்றாவிடில் பார்வையாளர்கள் கமராவைப் பற்றி உணரத் துவங்கி விடுவார்கள்.

ஒரு காட்சியை எடுப்பதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட கமராக்களை நாம் உபயோகிப்பது குறித்து அதிகம் பேசியாகி விட்டது. இது நான் 'செவன் சாமுராய்' படம் எடுக்கும் பொழுது துவங்கியது. கடும் மழை, புயலில் கொள்ளையர்கள் குடியானவர்களின் கிராமத்தை தாக்கும் பொழுது என்னதான் நடக்கும் என்பதை முன்கூட்டியே சொல்ல முடியாது போயிற்று வழக்கமான முறையில் ஒவ்வொரு ஷொட்டாக நான் படம் பிடித்திருந்தேனென்றால் ஒரே செயல் இரண்டு முறை சற்றும் மாறாது படம் பிடிக்கப்பட்டிராது என்பதற்கு, யாதொரு உத்தரவாதமும் இல்லை. எனவே மூன்று கமராக்களை ஒரே சமயத்தில் ஓடவிட்டேன். இதன் விளைவு மிகப் பிரமாதமாக இருக்கவே இதே உத்தியை விறுவிறுப்பு குறைவான சம்பவங்களை படம் பிடிப்பதிலும் பயன்படுத்தினேன். அடுத்தாற்போல் இகை இச்கிமோனோ நோ கிரோகு (Ikimono no Kiroku - Record of a Living Being) என்ற படத்திலும் நான் உபயோகித்தேன். தலோரயர் ரெப்த்ஸ் படத்தை உருவாக்கிய பொழுது நான் ஒரு ஷொட்டில் ஒரு காட்சி என்கிற முறையை பெரும் அளவு பின்பற்றத் தொடங்கினேன்.

மூன்று கமராக்களை ஒரே சமயத்தில் பயன்படுத்துவது என்பது அவ்வளவு சுலபமன்று. அவற்றை எவ்விதம் நகர்த்துவது என்பதை நிர்ணயிப்பது மிகவும் கடினமான காரியமாகும். எடுத்துக்காட்டாக ஒரு காட்சியில் வரும் மூன்று நடிகர்களும் பேசிக்கொண்டும் அசைந்து கொண்டும் இருப்பதாக வைத்துக் கொள்வோம். A, B, C, கமராக்கள் இந்த காட்சியை எடுக்க முயலும்போது முழுமையான காட்சித் தொடர்ச்சிகூட பற்றாக் குறையாக இருக்கும். ஒரு சராசரி கமரா ஒப்ரேட்டராலும் கமரா அசைவுகளின் வரைபடத்தை புரிந்து கொள்ள முடியாது. ஜப்பானிலுள்ள ஒளிப்பதிவாளர்களில் இதை புரிந்து கொள்ளக் கூடியவர்கள் நாகாய் அசாகஸா மற்றும் சைட்டோ டாகவோ மூன்று கமராக்கள் வைக்கப்பட்டிருக்கும் நிலைகள் ஒவ்வொரு ஷொட்டின் ஆரம்பத்திலிருந்துமுடிவு வரை மாறுபட்டிருப்பதுடன் நில்லாது இடையிலும் பல்வேறு மாற்றங்களை கொண்டிருக்கும். பொதுவாக நான் A கமராவை வழக்கமான நிலைகளில் வைத்துவிட்டு B கமராவை விரைவான முக்கியமான ஷொட்களுக்காக உபயோகப்படுத்துவேன் C கமராவை ஒரு கெரில்லா யூனிட்டைப்போல் பயன்படுத்துவேன்.

ஒளியை நிர்மாணம் செய்கிற டெக்னீஷியன்களின் பணி மிகவும் பண்டப்புதிறன் வாய்ந்ததாகும். உண்மையிலே ஒரு திறமையான ஒளி அமைப்பாளர் தனக்கென ஒரு திட்டம் வைத்திருப்பினும் கூட அதனை கமராமென் மற்றும் இயக்குநர் ஆகியோருடன் விவாதிப்பது அவசியமானது. அவருக்கென்று திட்டம் ஏதும் இல்லாத பட்சத்தில் அவருடைய வேலை ஃப்ரேம் முழுவதையும் ஒளிப்படுத்துவது என்பதாக நின்றுவிடும் உதாரணமாக வண்ணப்படத்திற்கான தற்போது கடைப்பிடிக்கப்பட்டு வரும் ஒளி அமைப்பு முறை தவறானது என்று நான் நினைக்கிறேன். நான் எப்பொழுதும் சொல்வது என்னவென்றால் வண்ணங்கள் பலமாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒளி அமைப்பு கறுப்பு, வெள்ளை படத்திற்கு இருப்பதைப்போல் அமைத்தால் தான் நிழல்கள் பொருத்தமாக வெளிவரும்.

கமராவில் இடம்பெறாது போய் விடினும் அரங்கம் மற்றும் அதை சார்ந்த பொருட்களுக்கான அசல் தன்மையை வலியுறுத்துபவன் என்ற குற்றச்சாட்டிற்கு நான் இலக்காகி உள்ளேன். ஆனால் உண்மையில் நான் வேண்டாவிடினும் இதனை எனது குழுவினர் செய்துவிடுகின்றனர். முதன் முதலாக அசலான தன்மையுடைய அரங்கங்கள் மற்றும் அவற்றிற்கான பொருட்கள் ஆகியவற்றை தனது படங்களில் கோரிய ஜப்பானிய டைரக்டர் மிஸோகுசி கெஞ்சி அவரது படங்களில் வரும் அரங்கங்கள் உண்மையிலேயே உயாதரமானவை. அவரிடமிருந்து திரைப்படம் எடுப்பது பற்றி நிறைய கற்றுக் கொண்டேன். அரங்கம் அமைப்பதோ அவற்றில் மிக முக்கியமானது அரங்கத்தின் தரம் நடிகர்களின் நடிப்பு தரத்தை மிகவும் பாதிக்கிறது ஒரு

# திரைப்படமெடுப்பது; சில குறிப்புகள்...



வீட்டின் திட்டம் மற்றும் அறைகளின் அமைப்பு ஆகியன சரியாக அமைந்துவிட்டால நடிகர்கள் அவற்றில் இயல்பாக நகருவார்கள். நான் ஒரு நடிகனிடம் ''இந்த அறைவீட்டின் பிற அறைகளுடன் எவ்வாறு 'சம்மந்தப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றி நினையாதே'' என்று கூறினால் அவனால் இயற்கையாக இருக்கமுடியாது. இதன் காரணமாக அரங்கத்தை தத்ரூபமாக உருவாக்கி விடுகிறேன். அதுபடப்பிடிப்பை கட்டுப்படுத்துகிறது ஆனால் அது அசல் தன்மையை உருவாக்கித் தருகிறது.

ஒருபடத்தை இயக்கத்துவங்குகிற தருணம் தொட்டு நான் இசை மற்றும் ஒலி அமைப்பு ஆகியவை குறித்து சிந்திக்கத்துவங்கிவிடுவேன. எனக்கு எவ்விதமான ஒலிவேண்டுமென்பதை நான் படப்பிடிப்பிற்கு முன்னரே முடிவுசெய்து விடுகிறேன். செவன் சாமுராய் மற்றும் யோஜிம்போ போன்ற சில படங்களுக்கு ஒவ்வொரு பிரதான கதாபாத்திரம் அல்லது சில குறிப்பிட்ட கதாபாத்திரங்கள் ஆகியவற்றிற்காக நான் தனித்தனியாக சாராம்ச இசையை உபயோகிப்பது உண்டு.

ஹயசாகா ஃப்யுமியோ எனது படங்களுக்கு இசை அமைப்பாளராகப் பணியாற்றத்தொடங்கியவுடன் திரை இசை பற்றிய எனது கருத்து மாறிவிட்டது. அது நாள் வரை திரை இசை பக்க வாத்திய இசையாகத்தான் இருந்தது. சோகமான காட்சிக்கு சோகமான இசை என்பதாக இவ்விதம்தான் பலரும் இசையை அழுத்தமின்றி உபயோகிக்கிறார்கள். ட்ரங்கன் ஏஞ்சல் படத்திலிருந்து முக்கியமான காட்சிகளுக்கு மெல்லிய இசையைத்தான் உபயோகித்துள்ளேன். வழக்கத்திறகு அப்பாற்பட்ட முறையில் நான் இசையைப் பயன்படுத்தியுள்ளேன். ஹயசாகாவுடன் பணியாற்றத்தொடங்கியதிலிருந்து ஒலி- பிம்ப அனுசரணையை விடுத்து ஒலிபிம்பம் ஆகியவற்றை எதிரும் புதிருமாக யோசிக்கத் தொடங்கினேன்.

எடிட்டிங்கிற்கு மிகவும் முக்கியமானது பாரபட்சமற்ற நோக்கு. நீங்கள் எத்தனை சிரமத்திற்கிடையில் ஒரு ஷொட்டை எடுத்திருப்பினும் அது சுவாரஸ்யமானதாக இல்லாவிடில் அதனை பார்வையாளர்கள் பொருட்படுத்த மாட்டார்கள். படம்பிடிக்கையில் இருந்த உங்களது உற்சாகம் படத்தில் வரவில்லையென்றால் நீங்கள் அதை வெட்டுகிற அளவிற்கு பாரபட்சமற்று இருக்க வேண்டும்.

எடிட்டிங் உண்மையிலேயே சுவாரஸ்யமானது ரஷ்பிரிண்டுகளை பொதுவாக நான் என்குழுவினருக்கு போட்டுக் காண்பிப்பதில்லை. மாறாக படப்பிடிப்பு முடிந்தவுடன் எடிட்டருடன் சேர்ந்து மூன்று மணி நேரமாவது ரஷ்காட்சிகளை தொகுப்பேன். பின்னரே அவற்றை அவர்களுக்கு காட்டுவேன். அவர்களது உற்சாகத்தைத் தூண்ட தொகுக்கப்பட்ட காட்சிகளைக் காட்டுவது அவசியம். சில நேரங்களில் ஒரு காட்சியை எடுக்க ஏன் பத்து நாட்கள் ஆயின? மற்றும் என்ன படம் பிடிக்கப்படுகிறது என்பன வெல்லாம் அவர்களுக்குப் புரியாது. தொகுப்பினைப் பார்க்கும் பொழுது அவர்களது உழைப்பின் பயனை உணர்ந்து மீண்டும் உற்சாகம்கொள்வார்கள். இவ்வாறு எடிட் செய்யப்படுவதானால் ஷூட்டிங் முற்றுகிற பொழுது நான் நேர்த்தியான இணைப்பினை மட்டுமே செய்யவேண்டியிருக்கும்.

இளைய தலைமுறையினருக்கு எனது அனுபவங்களை ஏன் அளிப்பதில்லை என்று அடிக்கடி கேட்கப்படுகிறது. நான் அதை செய்யமிகுந்த விருப்பம்கொண்டுள்ளேன். என்னிடம் பணியாற்றிய உதவி டைரக்டர்களில் தொண்ணூற்றுஒன்பது சதவிகிதத்தினர் இன்று இயக்குநர் ஆகிவிட்டனர். ஆனால் அவர்களில் ஒருவராவது முக்கியமானவற்றைக் கற்றுக்கொள்ள முயற்சித்தாரா என்பது தெரியவில்லை. ■

நன்றி - சலனம்

## நூல்நோக்கு




இந்நூல் நூலாசிரியரின் அதி தீவிர தேடலின் பின்னான ஒரு மலர்ச்சி. சமகால அரசியல மாற்றங்களின் சற்று முன்பிருந்த இறுக்கமான காலத்தில் வன்னியில் உருவாக்கம்பெற்று, தாயின் பிரசவ வேதனையைப் போன்றதொரு வேதனையைச்சுமந்து பிரசவித்த நூல்.

இதழியல் என்றாலே இ... இதழியலா? என்ற ஒரு அலட்சியப் போக்கிலிருந்த சமூகத்தை தட்டி எழுப்பும் ஊக்கமாத்திரை இந்நூல். இதைவிட அறிவு ஜீவிகள் பலர் கூட பொது நோக்கில் திரும்பிப்பாராத ஒரு கடினமான பக்கத்தின் துணிவான பார்வை தான் ''செய்தித் துறை ஓர் பார்வை''

ஊடகத்துறை மின்னணு தொழில் நுட்பத்தில் வளர்ச்சிப்பெற்றுச்செல்லும் வேகத்திலும் கூட ஊடகத்துறை வளர்ச்சியில் பின் நிற்கும் சமூகத்திற்கு ஒரு வழி காட்டி

இன்று இதழியலாளனுக்கும் சமூகத்திற்கும் இடையேயான தொடர்பு எமது சமூகத்தில் வேறுபாடான கருத்துருவாக்கங்களை ஏற்படுதஇ உறவுகளில் கூட ஒரு கசப்பான நிலையை ஏற்படுத்தியிருக்கின்றது என்றுதான் சொல்லவேண்டும்.

ஏனெனில் இது இதழியல் பற்றிய அடிப்படைத் தெளிவு சமூகத்திற்கு இல்லாதது காரணமாக அமையலாம். இதழியலாளர்கள் கூட இதழியல் கோட்பாடுகள், இதழியல் சட்டங்கள், சமூகபொறுப்புணர்வுடன் இதழியலை கையாளும் போக்கு கூட குறைவாகவே காணப்படுகின்றது.

எனவே இதழியலைப் பற்றியதும் குறிப்பாக பத்திரிகை துறைசார்ந்த அடிப்படையான அம்சங்களைத்தாங்கிய சத்தியன் தவராஜாவின் படைப்பு ''செய்தித்துறை ஓர் பார்வை'' இதழியல் மாணவனாக கற்றுக் கொண்டே இதழியலை திரும்பிப் பாராதோரை எட்டிப் பார்க்கத்தூண்டிய துணிவான முயற்சி.

ஆரோக்கியமான பத்திரிகைத்துறை கொண்டிருக்க வேண்டிய விடயங்களின் அலசல் இன்றைய பத்திரிகையியல் மீதான பார்வையில் பத்திரிகைக்கும் சமூகத்திற்கும் இருக்கும்\இருக்கவேண்டிய பொறுப்புணர்வுகள் பற்றியதான தெளிவான விளக்கத்தோடு ஆரம்பித்து பத்திரிகை துறைப்பண்புகள், செய்தியாளனின் தேவை, படைப்பாளியினால் நன்கு உணர்த்தப்பட்டுள்ளது.

பத்திரிகையினதும் செய்தியாளனினதும் பண்புகளோடு சிறந்த ஒரு செய்தியாளன் கொண்டிருக்க வேண்டிய தகுதி, பத்திரிகைக்கும் செய்தியாளனுக்கும் இருக்கவேண்டிய தொடர்பின் வரையறை என்பனவற்றோடு செய்தியாளனுக்குரிய விசேட இயல்புகளையும் காத்திரமாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

செய்தியாளன் அறிந்திருக்க வேண்டிய செய்தி எவ்வாறு சேகரிப்பது என்பது பற்றிய வழிகாட்டலும் செய்தி எழுதும் முறைமையும் படைப்பாளி தெளிவுபெற உணர்த்தியுள்ளார்.

செய்தியின் வகைகள் விசேட அம்சமாக சுட்டிக் காட்டப்பட்டுள்ள தோடு, செய்தியாளன் பேட்டி காணும் சந்தர்ப்பங்களில் கைக்கொள்ளவேண்டியநடைமுறைகளோடுபேட்டியினைத் தொகுத்து எழுதும் முறையையும்கூட இந்நூலில் குறிப்பிடப்பட்டிருப்பதனூடாக ஊடகவியலாளனுக்கு இது ஒரு சிறந்த கைநூல் என்ற அங்கீகாரத்தை எட்டிப்பிடித்துவிட்டது என்றே கூற வேண்டும்

செய்திகளை பிரசுரத்திற்கு தெரிவு செய்தல், ஆக்கப் படைப்புகள் கொண்டிருக்க வேண்டிய தன்மை, விளம்பரம் பற்றிய ஓர் பார்வை என இதழியலாளனின்செய்திறனை கூர்மையாக்கும் மதியுரைகள் பலவற்றையும் தாங்கிய இந்நூல் இன்றைய இதழியல் கடலில் கால் வைத்திருக்கும் சமூகத்தினருக்கும், கால் பதிக்க எத்தனிக்கும் சமூகத்திற்கும் சிறந்த வழிகாட்டியாக அமைந்துள்ளமை மறுக்கபடியாத உண்மை

○ உணர்வின் பகிர்வு



# வழி திறந்த யாழ்ப்பாணப் பாதை பயண அனுபவத்தின் உணர்வலைகள்

அ. அன்ரன் அன்பழகன்

வவுனியாவில் இருந்து புறப்பட்ட முதலாவது தொகுதி பயணிகளை ஏற்றியபடி யாழ்ப்பாணம் நோக்கி வந்த முதலாவது பேருந்து முகமாலையை அடைந்த போது நேரம் ஐந்து மணியைத் தாண்டியிருந்தது. நாலரை மணியுடன் கண்காணிப்புப் பணியை முடித்துக் கொண்ட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அலுவலர்கள் சென்று விட்டனர்.

அந்தப் பேருந்தின் முன்னிருக்கையில் இரத்தின சாரதேரர் எனும் பௌத்த பிக்குவும் வேறு சில சிங்களப் பயணிகளும், அமெரிக்க பிரஜை என தன்னை அறிமுகப்படுத்திய வில்லியம் என்பவரும் பயணித்திருந்தனர். இவர்கள் யாழ்ப்பாணம் நாகவிகாரையின் விகாராதிபதியைச் சந்திப்பதற்கான பயணத்தை மேற் கொள்வதாகத் தெரிவித்தனர்.

அப்போது பாதை மூடப்பட்டிருந்தது. எனினும் தாம் இராணுவத்தினருடன் பேசி பயணத்தைத் தொடரப் போவதாகக் கூறி இராணுவக் காவலரண் நோக்கிச் சென்றனர்.

1998இல் சிறிலங்காவின் சுதந்திரதின பொன் விழாக் கொண்டாட்டங்களுக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து பேருந்தில் ஆட்களை தலதா மாளிகைக்கு அழைத்துச் செல்லப் போவதாக அப்போதைய படைத்துறைப் பிரதியமைச்சர் ரத்வத்த ஊடகங்கள் ஊடே பறையறைந்திருந்தார். ஆனால் கண்டிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து பேருந்து செல்லாமலே சுதந்திரபொன் விழாக் கொண்டாட்டங்கள் முடிந்து போயின. பலமுறை ஏ - 9 பாதையூடு பயணத்துக்கு அவர் தேதி குறித்திருந்தார். அவர் போகம்பர சிறையில் இருக்கிற போது தான் புரிந்துணர்வு ஒப்பந்தஅடிப்படையில் தென்பகுதி பயணிகள் யாழ்ப்பாணத்துக்குப் பயணித்தனர்.

காலம் தாழ்த்தி வைபவரீதியாக திறக்கப்பட்ட பாதையினூடே விடுதலைப் புலிகளின் அரசியல் போராளிகள் ஆயிரக்கணக்கில் திரண்டு வந்த மக்களால் அழைத்துச் செல்லப்பட்டனர். படையினர் அனுமதிக்காத போதும் மக்கள் தடையுடைத்து வந்து முகமாலையில் இருந்து அவர்களை அழைத்துச்சென்றிருந்தனர்.

பளைப் பகுதியைச் சேர்ந்த பலர் தமது வீடுகளைப் பார்ப்பதற்கு சைக்கிள்களிலும் மோட்டார் சைக்கிள்களிலும் வந்திருந்தனர். இவர்களில் பலர் அன்று மாலையே திரும்பிவிட்டனர். சிறிலங்கா இலட்சனை பொறிக்கப்பட்ட தனது உலோகப்பட்டியை அணிந்தபடி கிராம சேவை அலுவலர் ஒருவரும் வந்திருந்தார்.

''யாழ்ப்பாணம் - விடியலை நோக்கி'' எனும் இலவசச் சிறப்பிதழை பாதை வழியே விநியோகித்தபடி 'வீரகேசரி' நிறுவன வாகனத்தொகுதி பயணித்தது.

ஏ-9 வீதியை அண்டி தாழப்பறந்த விமானப்படையின் உலங்கு வானூர்தி வவுனியா-யாழ்ப்பாணப்பயணத்தை மேற்கொண்டது. கனேடிய தூதரக அதிகாரிகளும் வந்து சென்றிருந்தனர்.

துயரமும், உயிராபத்தும் நிறைந்த சங்குப்பிட்டி - கேரதீவு, கொம்படி-ஊரியான், கிளாலி - பூநகரிப்பாதைப் பயணங்களைத் தொடர்ந்துகப்பல்விமானம்எனத்தொடர்ந்த பயணம்முடிவுக்கு வர மீண்டும் பன்னிரண்டு வருடங்களின்பின் ஏ-9 நெடுஞ்சாலை பயணத்துக்காக திறந்துகொண்டது.

வன்னியை இந் நெடுஞ்சாலை வழியே இருகூறாக்கிப் பின் இந்த நெடுஞ்சாலையையே உந்து தளமாகக்கொண்டு (Launching Pad) மேலும் கூறுகளாக்கி தமிழர் தாயகத்தைச் சிதைப்பதற்கு எடுக்கப்பட்ட இராணுவ முயற்சி முறியடிக்கப்பட்டது. தேசியத் தலைவர் பிரபாகரன் - பிரதமர் ரணில் ஆகியோர் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் இந்தப் பாதை வழியான பயணத்துக்கு வழிசமைத்தது.

எனினும் யுத்தத்தின் வடுக்கள், போர்த் தழும்புகளாய் காணப்படுவதை இந்த நெடுஞ்சாலையூடான பயணம் உணர்த்தியது. சிதறிப்போய்விட்ட 'பஸ்குலா' கோட்டையை அடையாளம் காட்டுவதற்கு உருக்குலைந்த யுத்தத் தாங்கி ஒன்றும் கடவேரியும் மட்டுமே துணைபுரிந்தன. இராணுவம் நிலைகொண்டிருந்த இடங்களில் எல்லாம் 'மிதிவெடி அபாயம்' பற்றிய அறிவிப்புக்கள் அடையாளம் காட்டின. இன்னும் அகற்றப்படாத கம்பிச்சுருள்கள், பொறியமைப்புகள் என்பவற்றுக்கிடையே, யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்து கொள்ளாத கண்ணிவெடி, மிதிவெடிகள் காத்திருக்கின்றன என்பதை உணர முடிந்தது.

தமது வாழ்வை, உடலின் அங்கத்தை, குருதியை, வியர்வையை ஈகம் செய்தவர் இந்தப் பாதையில் பயணிப்பதற்கான அரசியல் சூழ்நிலையை ஏற்படுத்தியவர்கள் என்பதை நினைக்காது எப்படிப் பயணிக்க முடியும்? படைமுகாமின் தடையுடைத்துபாதைஅமைப்பதற்கான சமரில் தற்கொடை ஈகம் செய்த லெப். கேணல் சரா அவர்களின் கவச கனரக வாகனம் இன்றும் சாட்சியமாய் ஆனையிறவு வாசலிலேயே காத்துக்கிடக்கிறது அப்போதைய ஆனையிறவுப் படையதிகாரி பிரிகேடியர் சரத் கருணாரட்ண சொன்னதை இப்போது நினைத்துப் பார்க்கிறேன். ''நான் கட்டளை வழங்கும் அறையில் இருந்தேன் சண்டை மிக நெருக்கமாகி உக்கிர மடைந்திருந்தது. காவலரண்களை தகர்த்தபடி கனரக வாகனம் ஒன்று முன்னேறி வருவது பற்றி எனக்கு அறிவிக்கப்பட்டபோது அதனைத் தடுப்பதற்கான எந்த வழி வகையையும் அறியாத நிலையில் இருந்தேன்'' என்றார்.

தற்காலிக பின்னடைவைச் சந்தித்த அந்த சமரை காலம் வெற்றிகொள்ள வைத்தது அழிக்கப்பட்டு விட்ட போதும் ஆனையிறவு பெருந்தாக்குதல், ஆகாய கடல் வெளிச்சமர் என்பவற்றில் ஆகுதியாகிய மாவீரர்கள் நினைவுமண்டபத்தில் யாழ். சென்ற அரசியல் போராளிகள் அஞ்சலி செலுத்தியதை பார்த்து நின்ற அனைவரின் இமை விளிம்பிலும் ஈரத்தை ஏற்படுத்தியது.

முகமாலையில் டாங்கி ஒன்று வீதி ஓரத்தில் முகம் கவிழ்ந்து கிடக்கிறதை பார்க்கக் கூடியதாக இருக்கிறது ஆனையிறவு வெற்றிக்கு அடித்தளமிட்டுக்கொடுத்த குடாரப்பு தரையிறக்கத்துடன் முகமாலை வரை உருவாக்கப்பட்ட இராணுவ பெட்டியமைப்பு சிறிலங்கா இராணுவத்துக்கு பெரும்நெருக்கடியையும் சவாலையும் ஏற்படுத்தியது இதனை முறியடிக்க எட்டு முறை எடுக்கப்பட்ட 'வலிசக்கர' முயற்சிகள் மயிர்கூச்செறியும் விதத்தில் முறியடிக்கப்பட்டதன் சாட்சியம் தான் இது என்பது மறந்துபோயிருக்காது.

செல்லின் சிதறல்களில் குளித்ததனால் பட்டுப்போன பின்பும் கொட்டுகள் இன்னும் வரிசையாகவே நிமிர்ந்து நிற்கின்றன. இவையும், முகப்பு மட்டுமே தப்பிப்போன நிலையில் இருக்கும் முகமாலை ஆரோக்கியமாதா ஆலயமும், செக்கோசிலவாக்கிய பல்குழல் செலுத்திகளின் ''அக்கினிச் சுவாலையின்'' சாட்சியங்களாக இன்றும் நிலைத்திருக்கின்றன. ஆறு நாட்களில் ஆனையிறவை அடையும் கனவில் புறப்பட்ட அக்கினிச்சுவாலை முகமாலையைதாண்டாது அப்படியே அணைந்து போனதை எப்படி மறக்கமுடியும்.

ஈகமும், அர்ப்பணிப்பும் புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு இட்டுச்சென்றது. ஒப்பந்தம் பாதை திறப்புக்கு வழி சமைத்தது. ■

## பிரமுக அறிமுகம்



அமைச்சர் ஜி எல் பீரிஸ்

இவர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் முன்னாள் சந்திரிகா அரசில் மிக மிக முக்கிய பிரமுகராக இருந்தவர். இந்நாள் ரணில் அரசிலும் அதே யளவு முக்கியத்துவம் பெற்றவராகவே உள்ளார்

இவரைத் 'தீர்வும் பொதி புகழ்' பீரிஸ் என்றால் நன்கு தெரியும் சந்திரிகா ஆட்சியில் அதிகம் பேசிய அமைச்சரும் இவர் தான். அதிகம் பேசப்பட்ட அமைச்சரும் இவர்தான்.

நீதியமைச்சர், இனவிவகாரங்களுக்கான அமைச்சர் அரசியலமைப்பு மறுசீரமைப்பு குழுத்தலைவர், பிரதி நிதியமைச்சர் என அவர் வகித்த பதவிகள் ஏராளம்.

சந்திரிகாவின் 'தீர்வுப்பொதியை' தமிழ் மக்களுக்கும், சர்வதேசத்திற்கும் ஓர் 'அமுதசுரபி' போன்று காட்டியவர். எதுவுமே இல்லாத அந்த 'வெற்றுப் பொதியை' சுமக்க முடியாது சுமப்பவர் போன்று பாசாங்கு காட்டி திகைக்கவைத்த மிகப் பெரும் சட்டத்தரணி.

அப்பாவித் தோற்றம். தடித்த கண்ணாடிகளை ஊடுருவித் துளைக்கும் கூரிய பார்வையினூடே அவரது சட்டஞானத்தின் துல்லியம் தெரியும். இந்த சட்ட ஞான சாதுரியம் ஒருகாலத்தில் சந்திரிகாவின் வெற்றியின் பின்பலமாக இருந்தது. இன்றும் இதே சாதுரியமே சந்திரிகாவை அச்சுறுத்தும் பின்புலமாகவும் உள்ளது.

சமாதானத் தீர்வுப் பொதியையே சந்திரிகாவைத் தீர்த்துக் கட்டும் சதிப் பொதியாக மாற்றிய ஆற்றல் பீரிஸுக்கே உரியது.

தர்க்கரீதியாகச் சிந்திக்கும் இம் மனிதர் ஆதர்க்கவாதியான சந்திரிகாவின் பின்னால் தானம் போட்டுத் திரிந்தமைக்கு காரணம் தான் புரியாத புதிர்.

இவருள் இருக்கும் அரசியல்வாதி வளரவளர இவருள் இருந்த பேராசிரியர் காணாமல் போய்க் கொண்டிருக்கிறார்!

சாத்தியமற்றதைசாத்தியமாக்கலாம் என நம்பி அதற்கான சாத்தியக்கூறுகளைப்பற்றி ஆராயாமலே பிரகடனம் செய்வதும், அவை சாத்தியமற்றவை என நிரூபணமாகும் போது அசாத்தியத்துணிவுடன் அவற்றை புறந்தள்ளி விட்டு புதியசாத்தியங்கள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்வதும் பீரிஸின் சுபாவமாகும்.

இப்போது சாத்தியமாகும் எனக் கூறிக் கொள்வது புதிய சமாதான வழிமுறைகளூடான தீர்வு பற்றியது... எப்போதுமே சாத்தியமாகாமல் நழுவிப் போய்க் கொண்டிருப்பது அதே சமாதானம் குறித்த இவரது கணிப்பீடுகள்.

இவரின் கடந்த கால நம்பிக்கை நட்சத்திரம் சந்திரிகா, வெறும் மினுமினிப் பூச்சியாக மட்டும் மாறியதில் சோகத்தை விடவும் கோபமே இவருக்கு மிஞ்சியது.

இவர் நிகழ்கால நட்சத்திரமாக நினைப்பது ரணிலை
எரிச்சலாக நினைப்பது சந்திரிகாவை;
வெறுப்பாக நினைப்பது கதிர்காமரை.

இவருக்கு பிடித்த சொல் 'அதிகாரப்பகிர்வு'
பிடிக்காத சொல் 'தீர்வுப்பொதி' (தற்போது)
நீண்டகாலக் கனவு-அமைதி சமாதானம்
நிரந்தரக்கனவு- அரசியல் தீர்வு

யெங்கும் பந்தல்கள் - குடா நாட்டில் உள்ள தகரப்பந்தல் சவில் விரல்விட்டுஎண்ணக் கூடியனவே அன்றுவேறு நிக

நாம் இந்த செம்மணியூடாக சென்ற பின்னர் எம்மோடு ஒன்றாக உண்டு உறங்கிய பத்தாயிரம் தோழர்களை

பிரமுகர்களின் உரையைத் தொடர்ந்து போராளிகள் உரையாற்றத்தொடங்கினர். அவர்களின் உரையின் போது



# கரை கடந்த உணர்ச்சிப் பெருக்கில் தடை தகர்த்த மக்கள் வெள்ளம்

''யாழ்ப்பாணம்'' என்பது நாடி நரம்புகளுடன் சம்பந்தப்பட்டநாமம். வன்னியில் பிறந்து வளர்ந்தவர்களைத் தவிர ஏனையோர் (சுமார் 50 வயதானோர்) எவரிடமும் நீங்கள் எந்தஇடம் என்று கேட்டால் யாழ்ப்பாணத்தில் ஏதோ ஒரு இடத்தைத்தான் சொல்வார்கள். விழுதுகள் இங்கே பாய்ந்திருந்தாலும் வேர்கள் அங்கேதான் ஈரலிப்புடன் உள்ளன. அவ்வாறிருக்கையில் வன்னியில் உள்ள இடம்பெயர்ந்த மக்கள், போராளிகளின் நிலை

எந்தத் தடையையும் உடைக்க மக்கள் தயார்.

பொதுவாக யாழ். மக்கள் சட்டத்துக்குக் கட்டுப்பட்டவர்கள் என்று பெயரெடுத்தவர்கள். துவிச்சக்கரவண்டி, வானொலிக்கான உத்தரவுப் பத்திரங்களை தவறாமல் பெற்று விடுவார்கள். ஒரு நாளைக்கு கொழும்புக்கு ஐந்து புகையிரதம் ஓடிய காலத்தில் வடபகுதி சேவை மட்டுமே லாபத்தில் இயங்கியது. ஏனெனில் நம்மவர்கள் தான் ஒழுங்காக பயணச் சீட்டு வாங்குபவர்கள். வட பகுதிச்சேவையின் லாபத்தி

ழ்வுகளுக்கு சென்றிருக்கும். பூரண கும்பம் வைத்து, ராணுவ காவலரண்களுக்கு பக்கததிலேயேமஞ்சல் சிவப்பு கொடிகளைக் கட்டி...என்று விபரித்துக்கொண்டே போகலாம்.

இதுவரை மனதில் மட்டுமே சுமந்த போராளிகளை தமது தோளில் சுமந்தார்கள் எம் மக்கள் கற்கண்டு வழங்கினார்கள்; வழியெங்கும் தாகசாந்திக்கான பந்தல்கள் தாங்கள் யார் பக்கம் என்று

இழந்து ஒரு வலிமையான ராணுவ, அரசியற் பலத்துடன் தான் உங்கள் முன்வந்துள்ளோம்.

அத்துடன் இந்த ஏழுவருட காலமும் பங்களித்த மக்கள் பற்றிக் குறிப்பிடும்போது ''கோழி குஞ்சுகளை இறக்கைக்குள் பாதுகாப்பது போல எம்மைப் பாதுகாத்த பல

மக்கள் அடிக்கடி உணர்ச்சி வசப்பட்டனர். மேடைக்கு முன்னால் கண்ணாடி போட்ட ஒரு வயோதிபர் தலையையும், விரலையும் ஆட்டி ஆமோதித்துக் கொண்டிருந்தார். அவர் வாய்திறந்து எதையும் பேசவில்லை ஆனால் அவரது கண்கள் ஓராயிரம் கதை சொன்ன



## ஊர் தழுவ விரைந்த விழுதுகளை வேர் சுமந்து சென்ற கோலம்

பற்றி சொல்ல வேண்டியதில்லை. எப்போது அங்கே கால்வைப்போம் என்ற துடிப்பு

அதேவேளை மிருசுவிலில் தொப்புள்கொடி உறவுகள் துடித்துக்கொண்டிருந்தன. வருவதோ 15 போராளிகள் ஆனால் வீரச்சாவெய்திய மாவீரர்கள், போராளிகள் அனைவரையும் இந்தப் 15 பேரின் முகங்களில காணும் துடிப்பு அவர்களிடம் இருந்தது. ஆனால் இந்த விடயத்தை ''கமுக்கமாக'' முடித்துவிட ராணுவம் பெரிதும் முயன்றது.

படையினர் தடுப்பதும் மக்கள் முயல்வதுமாக இருந்த போது ஒரு பொறி - சிப்பாய் ஒருவன் கை ஓங்கவே ஓங்கிய கை கீழே விழுவதற்குள் பல கைகள்சிப்பாய்மீது, பல ''மின்னல்'' களைச் சந்தித்தவர்களல்லவா அவர்கள். தற்போது தடைகளை தாண்டி ஓடுபவர்கள் என்று பெயர் பெற்ற எமது மக்கள் அன்று தடைகளை உடைத்துக் கொண்டு ஓடினார்கள். மூப்பென்றும் குஞ்சென்றும்பேதமிலலை.

இச் சந்தர்ப்பத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாடு நினைவுக்கு வருகிறது. தமிழ் என்ற மொழியின் மீதான பற்றுதலால் மொழியை சுவைக்க கூடியிருந்த மக்கள் கூட்டம் மீது ஒற்றையாக சுடக்கூடிய துப்பாக்கிகளால் பொலிசார் சுட்டபோது அவர்கள் பாய்ந்து ஓடினார்கள்; மிதிபட்டார்கள, உயிரிழந்தார்கள் அப்போது யாரும் தமிழீழத்துக்காக வாக்களித் திருக்கவுமில்லை. ஆயுதப் போராட்டத்தை ஆதரிக்கவும் மில்லை.

ஆனால் இப்போது மல்ரிபரல்காலம். இப்போது ''தமிழரின்தாகம்தமிழீழம்'' என்று உறுதியுரைஎடுககப்படுகிறது. ஆயுதம்ஏந்திப்போராடியவர்களும் இப்போதும் கொள்கைக்காக உயிரை இழக்கச் சித்தமானவர்களும் அரசினால் தடைசெய்யப்பட்டிருப்பவர்களுமான புலிகளைகாண

லேயே அப்போது புகையிரதச்சேவை உயிர்வாழ்ந்தது.

பிரிட்டிஷ்ஆட்சிக்காலத்தில் அப்போதைய மாகாண அதிகாரிகளால் வெளியிடப்படும் வருடாந்த நிர்வாக அறிக்கைகளில் யாழ்ப்பணத்தை எப்போதும் அமைதியான மாகாணம் (PEACEFUL PROVINCE) என்றே குறிப்பிடப் படுவது வழமை. அவ்வாறிருந்த ஒரு மக்கள் கூட்டம் இன்று இவ்வாறு மாறியதற்கு யார் காரணம்?

இந்தக்கேள்வியை ''மக்களே சற்றுச் சிந்தியுங்கள்'' என்ற தலைப்பில் ''இதற்கு20வருடங்களுக்குமுன் வடக்குக் கிழக்கில் முஸ்லிம் சிங்கள மக்களுடன்மகிழ்ச்சியாகவாழ்ந்த அக்காலத்தை மறந்து விட்டீர்களா? யாழ்தேவி புகையிரதத்தில் கொழும்புக்குச் சென்றதும்கூட...'' என்ற துண்டுப் பிரசுரத்தை தயாரித்தவர்களிடம் (முகமாலையில் இராணுவத்தால் விநியோகிக்கப் படுவது) விட்டுவிடுவோம்.

மீண்டும் மக்கள் தடையை உடைத்த இடத்திலிருந்து வருவோம். பல இழுபறிகளுக்கு மத்தியில் போராளிகள் முகமாலைக்கு வந்ததும் தேசியத்தலைவர்பிரபாகரனையே பார்த்தது போன்ற உணர்வு அவர்களுக்கு. அந்த ஆனந்தத்தை, உணர்ச்சிப்பெருக்கை எப்படி விபரிப்பது?

மகளிர் அபிவிருத்தி நிறுவனப்பணிப்பாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் இதனைஇவ்வாறு கூறுகிறார் ''வட கொரியா - தென் கொரியா என கொரிய நாடு பிரிக்கப்பட்டதன் பின்னர் தற்போது இரு நாட்டு மக்களும் சந்திகக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்தச்சந்திப்பில் எவ்வாறான உணர்வு அந்தமக்களிடம் நிலவியதோ அதே உணர்ச்சிபபெருக்கே இங்கு காணப்படுகிறது''.

வழியெங்கும் ராணுவத்தினர் பொலிசார் நீக்கமற நிறைந்து நிற்க உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டு ஊர்வலம் போல போராளிகளின் ஊர்வலம் நகர்ந்தது. வழி

உலகுக்கும், படையினருக்கும் உணர்த்திக் கொண்டிருந்தார்கள்.

இது பற்றி ஒரு போராளி குறிப்பிடுகையில் ''நாங்கள் இத்தாவிலை ஊடறுத்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த போதுநடந்த சமர் ஆனையிறவுச்சமர், தீச்சுவாலை என்பவற்றில் ராணுவத்தின் போரிடும் உள வலிமையை முற்றாகச்சிதைத்தோம். ஆனால் இந்தமக்கள் கூட்டம் இங்கிருக்கும் படையினருக்கு தாங்கள் இங்கு நிலைகொண்டிருப்பது பற்றிய நம்பிக்கையையேபோக்கி விட்டது. இந்த மக்கள் கூட்டத்தை வெல்ல முடியாது என்ற நிலை மனதளவில் உருவாகியிருக்கும்'' எனக் கூறினார்.

உண்மைதான், இந் நிகழ்வுகளைக் கண்ணுற்ற ஒவ்வொரு சிப்பாயும் ஒவ்வொரு சிங்கள காவற்துறையினரும் தனது ஊரில், தனது உறவுகளிடத்தில் இங்குள்ள நிலைமையைகூறத்தான்போகிறார்கள். அது சிங்கள தேசத்தில் எதிரொலிக்கத்தான் போகிறது.

○ சங்கர்

கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் ஈகச்சுடரேற்றி துயிலுமில்லப் பாடலைஒலி பரப்பிமலர்வணக்கம் செலுத்திய போராளிகள் செம்மணிககுவந்தபோது அங்கே எலும்புகளாக மீட்கப்பட்ட, மீட்கப்படாத எம் உறவுகளுக்காக மெளனமாக அஞ்சலி செலுத்தினர். இந்தச் செம்மணயூடாகநிகழ்ந்த இடப்பெயர்வு பற்றியும், இப்போது நடைபெறும் வரவேற்புப் பற்றியும் பாப்பா பின்வருமாறு கூறினார்:

''இந்த நிகழ்வு மனதை உலுப்புகின்ற உணர்வு பூர்வமான நிகழ்வு. இந்த தொப்புள் கொடி உறவை எவராலும் பிரிக்கமுடியாது செம்மணியூடாக வரும் போதுஎங்கள் கால்கள்கூசியது. அன்று

முகங்களை இங்கே காண்கிறேன்'' என்று நன்றி மேலிடக் கூறினார்.

முத்திரைச்சந்தையிலிருந்து ஜனசமுத்திரத்தினுள் ஊடறுத்து மேடைக்குச் சென்ற போராளிகளை மக்கள் கண்டு ஆனந்தித்தனர்.

மரங்கள், கூரைகளிலெல்லாம் மனிதத் தலைகளே

அவரது விழியிலிருந்து சொரிந்த கண்ணீர் போராளிகளின் வார்த்தைகள் சத்தியமானவை என்றுகூறிக்கொண்டிருந்தன.

போராளிகளின் உரையினைத் தொடர்ந்து கூட்டம் நிறைவு பெற்றதும் ஆரம்பத்தில் சைலாகு கொடுத்தமக்கள் பின்னர் மேடையில் ஏறி போராளிகளை ஆரத்தழுவித்

## பேசமறந்த நாவும் பேசித்தீர்த்த விழிகளும்

தெரிந்தது. அங்கு நாம் நிறைய பொதுமக்களுடன் கதைத்தபோது அங்குள்ள கலாச்சார, சமூக சீரகேடுகள் பற்றி மிகவும் அக்கறையுடன் குறிப்பிட்டனர்புலிகள் வரவுள்ளனர் என்ற செய்தி வெளியானதும் குற்றச் செயல்களின் எண்ணிககை பெருமளவில் வீழ்ச்சி கண்டதாகவும் குறிப்பிட்டனர். ஆயினும் கலாச்சார சீர்கேடுகள் உடனடியாக களைந்தெறியப் படவேண்டும் என வலியுறுத்தினர்.

இக்கருத்துக்களை யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைப் பேராசிரியர் சி.க. சிற்றம்பலமும் தனது உரையில் வலியுறுத்தினார்.

''இன்று நாம் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினை அரசியற் தீர்வும் மீளக்குடியமர்வும், புனர்நிர்மாணமும் மட்டுமல்ல, சீரழிந்து சிதைந்த தமிழரின் ஆத்மாவை அதன் பாரம்பரிய வழிநின்று செயற்படவைப்பதும் தான''

தூக்கி தமது அன்பை வெளிபடுத்தினர். இந்த அன்புப் பிடியில போராளிகள் திணறினர். ''மக்களே! போராளிகள் இனி உங்களோடுதான் இருக்கப்போகிறார்கள். இப்போது அவர்கள் களைதது விடடார்கள அவர்களைச் செல்ல விடுங்கள்'' என பல தடவை ஒலிபெருக்கியில் ஏற்பாடடாளாகள் அறிவிக்க வேண்டியிருந்தது.

எல்லாம் முடிந்ததும் வடமராட்சிக்கு செல்லவேண்டிய பெண்கள் மாணவிகளை அவசரப்படுத்தி வாகனத்தில் ஏற்றி அனுப்பினர் பல்கலைக் கழகமாணவர்கள. அதுபோல கொடிகாமத்தில யாரோ போக முடியாமல் நிற்கின்றார்கள் என்ற செய்தி கேட்டதும்அங்கு மோட்டார் சைக்கிளில் விரைந்து சென்றார் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தலைவர் கஜேந்திரன் ஆனால் அவர்கள வன்னியிலிருந்து வந்த பயணிகள் போராளிகளை வரவேற்கச் சென்றவர்களல்ல

(16ஆம் பக்கம் பார்க்க)

# ''விடுதலைப்புலிகள்'' ஏடு இன்று வெளிவருகின்றது

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகார பூர்வ ஏடான ''விடுதலைப்புலிகள்'' ஏடு இன்று வெளிவருகின்றது. தமிழீழத்தேசியத் தலைவரின் வரலாற்று முக்கியத்துவம் மிக்க ஊடகவியலாளர்கள் சந்திப்பு நிகழ்வின் பதிவுகளுடன் ''தாயகம் - தேசியம் - தன்னாட்சியுரிமை நிரந்தரத் தீர்வுக்கான அடிப்படை'' என்னும் முகப்புச் செய்தியுடன் ''பண்டா குடும்பம் போல் உண்டா உலகில்,'' ''தென்னிலங்கை மீளுமின்றதா! கனவு கரைந்து நனவிற்கு.'' ''சிங்கள அரசிற்கும் புலிகள் இயக்கத்திற்குமிடையேபோர்நிறுத்தஉடன்பாடு'' போன்ற கட்டுரைகளையும், உலைக்களம், விழுதுகள், சத்தியக் கடதாசி போன்ற இன்னும் பல அம்சங்களையும் தாங்கிஇவ்ஏடு வெளிவருகின்றது. இது ''விடுதலைப்புலிகள்'' இன் 103 ஆவது குரலாகும்.

## விரிவுரைகள்

முல்லைத்தீவுபிரதேசநிலையத்தின் கல்விமாணி பட்டக் கற்கை நெறிக்கான கல்வி உளவியல், கல்வி கோட்பாடுகள் ஆகிய பாடங்களுக்கான விரிவுரைகள் ஏப்ரல் 15, 16, 19, 20 ஆகிய நான்கு தினங்களிலும் புதுக்குடியிருப்பு ம. வியில் காலை8.30மணிமுதல் பி.ப. 4.00 மணிவரை நடைபெறும். (08)

---

**கரைகடந்த...**

எனினும் அப்படியொரு செய்தி கேட்டதும் பத்திரமாக வீட்டுக்கு அனுப்பும் துடிப்பு கஜேந்திரனுக்கு ஏற்பட்டது.

ஆம் இவ்வளவு நாளும் இந்தத்திறந்த வெளிச்சிறைச்சாலையில் கிருஷாந்திகள், ரஜனிகள் என பெயர்கள் அடிபட்டன அந்தப்பட்டியல் நீண்டு விடக்கூடாது என்ற துடிப்பு பல்கலைக்கழகமாணவர்கள் மத்தியில நிரம்பவே உள்ளதை உணர முடிகிறது.

நாளைய தேசத்தினை உருவாக்கும் இந்த இளைய தலைமுறையின் பொறுப்புணர்வு வியக்கவைக்கிறது. அதே சமயம் கஜேந்திரனின் உரை தென்னிலங்கை சமூகத்துக்கு ஓர் எச்சரிக்கையையும் விடுத்தது

''இன்று நாம் சிறிலங்கா அரசுக்கும் இங்கு வீதிக்கு வீதி நின்று கொண்டிருக்கின்ற சிறிலங்காப்படையினருக்கும் ஒன்றைக்கூறி வைக்க விரும்புகிறோம்.

நாம் இன்று அமைதியான முறையில் எமது கோரிக்கைகளை முன் வைத்துள்ளோம் இதனை அரசுஏற்காவிட்டால் யாழ்ப்பாணத்தில் உள்ள 40,000 சிங்களப்படையினரும் புதைகுழிக்குள் செல்ல நேரும்''

தமிழரின் சுயநிர்ணய உரிமை வலியுறுத்தப்பட்ட இக் கூட்டத்தில மேற்படிகருத்து ஒரு உறைப்பான செய்தியைசிய சிங்கள சமூகத்துக்கு விடுத்துள்ளது.

இப்போது பந்து அவர்கள் பக்கம்.

---

**தொழிற்**

துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் ஏற்றி வைத்தார்.

இதனையடுத்து பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழக கொடியினை கலைமகள் ஏற்றிவைத்தார். பெண்கள் தொழிற்பயிற்சி நிறுவனக் கொடியினை ஜெயகௌரி ஏற்றிவைத்தார்

இந்நிகழ்வின் சிறப்புரையை விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்கள் நிகழ்த்தினார். ஆசியுரையை கிளிநொச்சி மாவட்ட உதவி அரசாங்க அதிபர் பொன்: நித்தியானந்தம் நிகழ்த்தியதை யடுத்து கணனி, மற்றும் தையல் பயிற்சிவகுப்புக்களைதிருமதி. அடேல் பாலசிங்கம் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்.

---

**சிகிச்சை**

கடந்த மாதம் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட வேளையில் இவரை அறுவைச் சிகிச்சைக்கு உட்படுத்த வேண்டும் எனத்தெரிவித்து கொழும்புவைத்தியசாலைக்கு நிர்வாகத்தினர் அனுப்பி வைத்துள்ளனர்.

தான் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நாள்முதல் தன்னை எந்தவொரு வைத்தியரும் பரிசோதனைக்கு உட்படுத்தவில்லை என்றும் தன்னை கவனிப்பாரற்ற நிலையிலேயே வைத்திய சாலை நிர்வாகத்தினர் நடத்தியதாகவும் பாதிக்கப்பட்ட பெண் முறையிட்டுள்ளார்.

---

**புலிகளின்**

தொடர்ந்து தெரிவிக்கையில்; 'தம் மீதான தடை நீக்கப்பட வேண்டுமென விடுதலைப் புலிகள விடுத்துள்ள கோரிக்கை பற்றி அரசாங்கம் ஆராய்ந்து வருகின்றது.

மே மாதம் தாய்லாந்தில் ஆரம்பிக்கவுள்ள பேச்சுக்களுக்கு விடுதலைப் புலிகள் மீதான தடை இடைஞ்சலாக இல்லாதவாறு நடவடிக்கை எடுக்கப்படும்.

தாய்லாந்து பேச்சுக்களின் நோக்கம் சிறிலங்காவுக்குள் அதிக உரிமைகள் கொண்ட சுயாட்சியை விடுதலைப் புலிகள் ஏற்பார்களா என்பதாகும். விடுதலைப் புலிகள் கோரும் தனி நாட்டுக்கு நிகரான உரிமைகள், மாநில சுயாட்சி வழங்கப்பட்டால் அவர்கள் அதனைஏற்பார்கள் என்ற நம்பிக்கை உண்டு' என்றார்.

சமாதான முன் முயற்சிகளில் இந்தியாவும் ஈடுபாடு காட்ட வேண்டுமென்று தலைவர் பிரபாகரன் கூறியிருப்பதையும் ஏற்றுக் கொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சமாதானமுன் முயற்சிகளில் இந்தியாவிற்கு முக்கிய பங்குண்டு என்றும் மேலும் தெரிவித்துள்ளார்.

---

## நேர்முகப்பரீட்சை

சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான நேர்முகப்பரீட்சைகள் இன்று காலை 9.00 மணியளவில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது. விண்ணப்பித்தவர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (ப)

---

**தேசியத்**

கள் மேற்கொண்டிருந்த பாதுகாப்பு நடவடிக்கை குறித்தும் வியப்புத் தெரிவித்துள்ளன.

அத்துடன் தேசியத் தலைவரின் அமைதியும் நிதானமும் வியக்கத்தக்கதாக இருந்த தென இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.

---

**சாள்ஸ்**

தீபன் ஏற்றி வைத்தார். விழாச் சுடரினை தளபதி கோதை வழங்கி வைக்க விளையாட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின. இவ்விளையாட்டு நிகழ்வுகள் மாலை 6.00 மணி வரை இடம்பெற்றன.

இவ்விளையாட்டு நிகழ்வுக்கு கட்டளைத் தளபதிகள், தளபதிகள், பொறுப்பாளர்கள் ஏனையபடையணிப்போராளிகள் ஆகியோர் கலந்து கொண்டுசிறப்பித்தனர்.

தொடர்ந்து மாலை சாள்ஸ் அன்ரனி படையணியின் முதல் மாவீரன் லெப். சுஜன் நினைவாக அமைக்கப்பட்ட உருவப்படத்திற்கு மூத்த தளபதி கேணல் பால்ராஜ் ஈகச் சுடரினை ஏற்றிவைக்க உருவப்படத்திற்கான மலர் மாலையினை கட்டளைத் தளபதிகளான கேணல் பானு, கேணல் சொர்ணம், கேணல் சூசை ஆகியோர் அணிவித்தனர்.

தொடர்ந்து லெப். சுஜன் நினைவாக அமைக்கப்பட்ட நூல் நிலையத்தின் பெயர்ப் பலகையினை சோதியா படையணியின் சிறப்புத் தளபதி கேணல் துர்க்கா திரை நீக்கம் செய்துவைக்க அதற்குரிய மலர்மாலையினை மாலதி படையணியின் சிறப்புத் தளபதி கேணல் விதுஷா அணிவித்தார்.

கட்டளைத்தளபதி கேணல் பானு அவர்கள் நூல் நிலையத்தின் நாடாவினை வெட்டி திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து மேடை நிகழ்வுகள் ஆரம்பமாகின. இதில் சிறப்புரைகளை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் தந்தை கேணல்பால்ராஜ், கட்டளைத் தளபதி கேணல் சூசை ஆகியோர் நிகழ்த்தினர்.

போட்டிகளில் வெற்றியீட்டிய போராளிகளுக்கும், பயிற்சிகளில் திறமையாக செயற்பட்ட போராளிகளுக்குமான பரிசில்களைகட்டளைத் தளபதிகளான கேணல் பால்ராஜ், கேணல் சூசை, கேணல் சொர்ணம், கேணல் தீபன், கேணல் பானு, கேணல் விதுஷா, கேணல் துர்க்கா ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர்.

மேடை நிகழ்வுகளில் போராளிகளின்பட்டிமன்றம், நாடகம், இசை நிகழ்வுகள் என்பன இடம்பெற்றன.

இவ்விளையாட்டுப்போட்டியில் பாண்டியன் இல்லம் முதலாம் இடத்தையும், சோழன் இல்லம் இரண்டாம் இடத்தையும், சேரன் இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

---

**இந்தியா**

அடிப்படையில் நோக்க வேண்டும். இது குறித்து மத்திய அரசுடன் பேச உள்ளேன் எனவும் அவர் தெரிவித்தார்.

---

**வன்னி**

இவர்கள் துவிச்சக்கர வண்டிகள் மோட்டார் சைக்கிள்கள், கார், மற்றும் பஸ் மூலம் வருகின்றனர். இங்குவருகின்றவர்களின் கருத்துப்படி இன்னும் பெரும் தொகையிலானவர்கள் வன்னிக்கு வரவுள்ளனர் எனத் தெரியவருகின்றது. (08)

---


எமது வாடிக்கையாளர்கள்,
நண்பர்கள்,
வன்னியில் இருந்துவரும்
எமது இனிய உறவுகள்
அனைவருக்கும்
புதுவருட நல் வாழ்த்துக்கள்

★
★

# எரிக் கணேஸ்

ERIC GANESH

கண் பரிசோதித்து கண்ணாடி வழங்குபவர்கள்
566, மருத்துவமனை வீதி- யாழ்ப்பாணம்.


## சாவு அறிவித்தல்

### திரு. அருளம்பலம் சிவானந்தன்

பலாலிவீதி திருநெல்வேலி வடக்கைச் சேர்ந்த திரு. அருளம்பலம் சிவானந்தன் (ஓய்வுபெற்ற அரச கணக்காய்வாளர்) 10-04-2002 மாலை கொழும்பில் சாவடைந்துள்ளார். இவர் வைத்திய கலாநிதி மோகன் சிவானந்தன் (RADIOCARDiOLOGIST LEEDS INFOMARY), நிர்மலன் (போராளி) ஆகியோரின் அன்புத் தந்தையும், லோஜனாவின் (போராளி) அன்பு மாமனாரும், ஆரணியின் அன்பு பாட்டனாரும் ஆவார். இறுதிக் கிரியைகள் கொழும்பில் 13-04-2002 சனி காலை நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தருமபுரம்.
(1642)

தகவல்;
நிர்மலன் (போராளி)


உறவுகளே வருக......
உள்ளம் மகிழ வரவேற்கிறோம்......

உங்களுக்கு
எங்களைத் தெரியும்
அறிமுகம் தேவையில்லை

# த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்

கிளை நிறுவனம்:-
**த. குமாரசாமி அன் சன்ஸ்**
248/1, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

42, 44, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 2985


இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதப் பணிமனையில் 2002ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.